சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலத்துறை – 2021-2022 வேளாண் நிதிநிலை அறிக்கை – கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2021-2022 – வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை – ரூ.227.0588 கோடிக்கான நிதி ஒப்பளிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் – வெளியிடுதல்- ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வஇபதி) துறை

அரசாணை (நிலை) எண். 59 நாள்: 09.03.2022

திருவள்ளுவர் ஆண்டு, 2053

பிலவ, மாசி 25-ஆம் நாள்

படிக்கப்பட்டது:

1. வேளாண்மை நிதிநிலை அறிக்கை நாள். 14.08.2021, அறிவிப்பு எண்.1
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண். மாதி1/57204/2021, நாள். 27.09.2021 மற்றும் 12.10.2021.
3. தலைமைப் பொறியாளர் (வே.பொ.) அவர்களின் கடித எண். பாபமேதி/19407/2021, நாள். 23.09.2021, 12.10.2021, 25.11.2021, 12.01.2022 மற்றும் 02.02.2022.
4. இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்களின் கடித எண். மாதி2/14672/2021, நாள். 27.09.2021.
5. வேளாண்மை இயக்குநரின் கடித எண். மாதி1/57204/2021, நாள். 08.12.2021 மற்றும் 13.01.2022.
6. அரசாணை (நிலை) எண். 12, வேளாண்மை – உழவர் நலத் (வே.பொ. 2)துறை, நாள். 12.01.2022.
7. வேளாண்மை இயக்குநரின் கடித எண். KAVIADP/57204/2021, நாள். 03.03.2022.

ஆணை:

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில், 2021-2022-ஆம் ஆண்டிற்கான

வேளாண்மை - உழவர் நலத் துறைக்கான தனி நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தபோது, "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" எனும் திட்டத்தினை செயல்படுத்துவது தொடர்பான பின்வரும் அறிவிப்பினை மேற்கொண்டார்.

"ஐந்து ஆண்டுகளில் தமிழகம் முழுவதிலுமுள்ள அனைத்து கிராமங்களிலும் ஒட்டு மொத்த வேளாண் வளர்ச்சியை உருவாக்கிட அனைத்துத் துறைகளின் ஒருங்கிணைப்புடன் "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" என்ற மாபெரும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். வட்டார அளவில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, பால்வளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நீர்வள ஆதாரத் துறை, எரிசக்தித் துறை உள்ளிட்ட துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைப்பதே "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்". இச்சீரிய திட்டத்தின் கீழ், அனைத்து கிராமங்களும், ஒட்டுமொத்த வளர்ச்சியடைந்து, தன்னிறைவு பெற்ற கிராமங்களாக மாறவேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் தற்போது, 12,524 கிராமப் பஞ்சாயத்துகள் உள்ளன. இதில் ஒவ்வொரு ஆண்டிலும், ஐந்தில் ஒரு கிராம பஞ்சாயத்தை தேர்வுசெய்து, ஐந்தாண்டுகளில் அனைத்து கிராம பஞ்சாயத்துக்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அடுத்த 10 ஆண்டுகளில் 11.75 இலட்சம் எக்டர் தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும் என்ற தொலைநோக்கு திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தினைச் செயல்படுத்த 36 மாவட்டங்களில் ஆரம்ப கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது 19.31 இலட்சம் எக்டர் தரிசு நிலங்கள் உள்ளன என கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வேளாண்மையை விரிவு படுத்துவதற்கான அடுத்த நம்பிக்கை,

தரிசு நிலங்களே. தரிசு நிலங்களை பரிசு நிலங்கள் ஆக்கி சாகுபடி பரப்பு உயர்த்தப்படும்.

முதற்கட்டமாக, நடப்பு 2021-2022 ஆம் ஆண்டில், 2,500 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

திட்டத்தின் நோக்கங்கள் :

- கிராமத்தில் உள்ள தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வருதல்.
- நீர்வள ஆதாரங்களைப் பெருக்குதல்.
- சூரிய சக்தி பம்பு செட்டுகள் அமைத்தல்
- வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டி சந்தைப்படுத்துதல்.
- நுண்ணீர்ப் பாசன முறையினை பின்பற்றுதல்
- கால்நடைகளின் நலன் காத்து, பால் உற்பத்தியைப் பெருக்குதல்.
- வருவாய்த் துறையின் மூலம் புதிய பட்டா / பட்டா மாறுதல் செய்து வழங்குதல்.
- கூட்டுறவு சங்கங்கள் மூலம் அதிக அளவு பயிர்க் கடன்கள் வழங்குதல்.
- கால்வாய், பாசன நீர் வழித்தடங்களைத் தூர்வாருதல்

இத்திட்டமானது ரூ.250 கோடி செலவில் மாநில நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். மேலும், வேளாண்மைத் துறையின் திட்டங்களுடன் இதரத் துறைகளின் திட்டங்களுடனும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்".

2) வேளாண்மை இயக்குநர் தனது கருத்துருவில், மாண்புமிகு வேளாண்மை- உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, மேற்கண்ட "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" செயல்படுத்துதல் தொடர்பாக, 22.12.2021 அன்று கூடிய உயர்மட்டக்குழுவின் அறிவுரையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு துறைவாரியாக திட்டத்திற்கு ஒப்புதல், அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து உரிய வழிகாட்டுதலுடன் ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார் :-

I. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஒருங்கிணைந்து செயல்படுத்தவுள்ள

வேளாண்மைத் துறை திட்டங்களுக்கு ரூ.11.7578 கோடியும், வேளாண்மைப் பொறியியல் துறை திட்டங்களுக்கு ரூ.210.0200 கோடியும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை திட்டங்களுக்கு ரூ.5.281 கோடியும் ஆக மொத்தம் ரூ.227.0588/- கோடியினை, மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யுமாறும்,

II. வேளாண்மைத் துறை மூலமாக இத்திட்டத்தினை செயல்படுத்திட வழங்கப்படும் ரூ.11.7578 கோடியினை வேளாண்மை இயக்குநர் பெற்று, துணைத் தலைவர் மற்றும் வேளாண்மை இயக்குநர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை அவர்களுக்கு வழங்க உரிய ஆணை வழங்குமாறும்,

III. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.5.281 கோடி நிதியினை, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்களுக்கு வழங்க உரிய ஆணை வழங்குமாறும்,

IV. வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.210.0200 கோடி நிதியினை, தலைமைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுக்கு வழங்க உரிய ஆணை வழங்குமாறும்,

V. இத்திட்டத்திற்கென மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் தனியாக வங்கிக் கணக்குகள் துவக்கப்பட்டு கணக்குகள் முறையாக பராமரிக்க ஆணை வழங்குமாறும்,

VI. வேளாண்மை-உழவர் நலத் துறையின் கீழ் செயல்படும் அனைத்துத் துறைகளின் திட்டங்களை 1,997 கிராம பஞ்சாயத்துகளில் ரூ.227.0588 கோடி செலவில் ஒருங்கிணைத்து செயல்படுத்துவது தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளையும், அனைத்து துறைகளுக்கான பொதுவான திட்ட செயலாக்க வழிமுறைகளை கடைபிடித்திட அனுமதி வழங்குமாறும்,

VII. வேளாண்மை-உழவர் நலத் துறையின் மூலம் ஒன்றிய, மாநில நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் பிற திட்டங்களை

ஒருங்கிணைத்து (Dovetailed Schemes) செயல்படுத்திட அனுமதி வழங்குமாறும்,

VIII. உழவர் நலன் சார்ந்த இதரத் துறைகளான 1) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 2) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, 3) கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, 4) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, 5) நீர்வள ஆதாரத் துறை, 6) எரிசக்தி துறை, 7) கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை ஆகிய துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்காக இத்திட்டம் குறித்த துறைவாரியான விவரங்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரிக்குமாறும்,

IX. தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளில் விவசாயிகள் நலன் சார்ந்த அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு, வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலரைத் தலைவராகவும், உதவி வேளாண்மை அலுவலர்/ உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி விதை அலுவலர் அவர்களை கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலராகவும், இதரத்துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு "கிராம திட்ட செயலாக்கக் குழு" ஒன்றினை அமைத்திட அனுமதி வழங்குமாறும்,

X. மாவட்ட அளவில் அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை கண்காணித்திட, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை தலைவராகவும், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலராகவும், இதரத்துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட "மாவட்ட கண்காணிப்புக் குழு" ஒன்றினை அமைத்திட அனுமதி வழங்குமாறும்,

XI. மாநில அளவில், இத்திட்டத்தினைக் கண்காணித்திட அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் "மாநில

அளவிலான உயர்நிலைக்குழு" மூலம் கண்காணிக்க அனுமதி வழங்குமாறும்,

XII. மேலும், திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில், அரசாணையை எதிர்நோக்கி அனைத்து வேளாண்மை - உழவர் நலத் துறையின் முக்கிய திட்டங்கள், ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட 2,500 கிராம பஞ்சாயத்துக்களில் ஒருங்கிணைத்து (Dovetailed) செயல்படுத்தப்பட்டது. புதியதாக செயல்படுத்த ஆணை பெறப்பட்ட இதர சிறப்பு திட்டங்களும் அந்த 2,500 கிராம பஞ்சாயத்துக்களில் செயல்படுத்தப்பட்டது. இந்நிலையில் 22.12.2021 அன்று அரசு அளவில் கூடிய உயர் மட்டக்குழுவின் அறிவுரைகளின்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையினால் "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்" செயல்படுத்தப்படவுள்ள தேர்வு செய்யப்பட்ட 1,997 கிராம பஞ்சாயத்துகளில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தையும் சேர்த்து செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டது. எனவே நடப்பு ஆண்டில் 22.12.2021-க்கு முன்பு, 2,500 கிராமங்களில் ஒருங்கிணைந்த திட்டங்கள் (Dovetailed Schemes) மற்றும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதற்கு பின்னேற்பாணை வழங்குமாறும், 22.12.2021-க்கு பின்னர் புதியதாக தேர்வு செய்யப்பட்ட 1,997 கிராம பஞ்சாயத்துக்களிலும் ஒருங்கிணைந்த திட்டங்களையும் (Dovetailed Schemes), புதிய திட்டங்களையும் செயல்படுத்திட உரிய ஆணை வழங்குமாறும், வேளாண்மை இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

XIII. கிணறுகளின் வகையும், ஆழமும், மோட்டாரின் குதிரைத் திறனும் (HP), அதற்கான நிதித் தேவையும், ஒவ்வொரு தொகுப்பு நிலங்களின் நிலநீர் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மாறுபடும். முதற்கட்ட நில நீர் ஆய்வின் அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட 1,997 கிராமப் பஞ்சாயத்துகளில் 1,572 ஆழ்துளைக் கிணறுகளும், மற்றும் 358 குழாய் கிணறுகளும், பாதுகாப்பான மற்றும் இதர பாதுகாப்பற்ற குறு வட்டங்களில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக அமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான குறுவட்டங்களை தவிர்த்து இதர இடங்களில் கிணறு அமைத்திட சிறப்பு அனுமதி வழங்குமாறும்,

XIV. பெரும்பாலான கிணறுகள் 750 அடிக்கு மேல் தோண்ட வேண்டிய ஆழ்துளைக் கிணறுகளாகும். சூரிய சக்தி மூலம் செயல்படும் பம்புசெட்டுகள் அமைக்கும் பணிகள், பிரதம மந்திரியின் விவசாயிகள் ஆற்றல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத்திட்ட (PM - KUSUM) நிதியிலிருந்தும், பாதுகாப்பான குறு வட்டங்களில் அமைக்க உள்ள அனைத்து கிணறுகள், மின்மோட்டார் பம்புசெட்டுகள் மற்றும் நீர் விநியோக குழாய்கள் அமைக்கும் பணிகள், பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத்திட்டத்தின் துணை நிலை நீர் மேலாண்மை செயல்பாடுகள் (PMKSY - SWMA) நிதியிலிருந்தும் ஒன்றிய அரசின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் நிலையில், மாநில அரசின் பங்களிப்புத் தொகை மற்றும் கூடுதலாக தேவைப்படும் விவசாயிகளின் பங்களிப்புத் தொகை "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்" கீழ் நிதி ஒதுக்கீடு செய்யுமாறும்,

XV. வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்களைப் பயன்படுத்தி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 500 சிறுபாசன குளங்கள், 100 ஊரணிகள், 500 குளங்கள் மற்றும் 600 வரத்து கால்வாய்களை தூர்வாருதல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும். மேலும், இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, கிணறுகள் அமைக்கும் பணியில் உள்ள உபஇனங்களில் (ஆழ்துளைக் கிணறு / குழாய்க் கிணறு) நிலநீர் ஆய்வு மற்றும் நில நீர் ஆய்வு அறிக்கை அடிப்படையில் கிடைக்கக்கூடிய நீரின் அளவு பொறுத்து (Well yield) ஆழ்துளைக் கிணறு / குழாய்க் கிணறுகளின் தேவை அடிப்படையில் அளவுகளில் மாற்றம் செய்துகொள்ள தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல் துறை) அவர்களுக்கு அனுமதி வழங்குமாறும் வேளாண்மை இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3) கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்திட, துறை வாரியாக மற்றும்

இன வாரியாக கோரப்படும் திட்டப் பணிகள் குறித்த விவரங்களைப் பின்வருமாறு வேளாண்மை இயக்குநர் சமர்ப்பித்துள்ளார்:-

**அ. வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்ட விவரம் (ரூ.11.7578 கோடி)**

| பணியின் விபரம் | ஒரு அலகு தொகை ரூபாய் | மொத்த அலகுகள் | நிதி ரூ. கோடி |
|---|---|---|---|
| தென்னங்கன்று விநியோகம் | நெட்டை தென்னங்கன்று ஒன்றுக்கு ரூ.50 (3 கன்றுகள் x ரூ.50 x 200 பண்ணைக் குடும்பம் x 1,986* கிராமம்) – 100% மானியம் | 11.916 இலட்சம் கன்றுகள் எண்கள் | 5.958000 |
| வரப்புப்பயிர் (துவரை, உளுந்து, பச்சைப்பயறு தட்டைப்பயறு) | ஒரு எக்டருக்கு 5 கிலோ விதை x ரூ. 100= ரூ.500 ஒரு எக்டருக்கு மொத்தம் ரூ. 375/- 75 % மானியம்(1,986* கிராமம் X 15 எக்டர் கிராமம் ஒன்றுக்கு) | 29,790 எக்டர் | 1.1171250 |
| பயிர் பாதுகாப்பு கருவிகள் | | | |
| கைத்தெளிப்பான் விநியோகம் (Manual operated) – 12-16 லிட்டர் | கைத்தெளிப்பான் ஒன்றின் விலையான ரூ.1,500/-ல் மானியம் ரூ.750/- அல்லது 50 சதவீத மானியம் இதில் எது குறைவோ (1,997கிராமங்கள் Xரூ.750 Xகிராமம் ஒன்றுக்கு 5 தெளிப்பான்கள்) | 9,985 எண்கள் | 0.748875 |
| விசைத்தெளிப்பான் – விநியோகம் (Power / Battery Operated) -12-16 லிட்டர் | விசைத் தெளிப்பான் ஒன்றின் விலையான ரூ.6,000/-ல் மானியம் ரூ.3,000/- அல்லது 50 சதவீத மானியம் இதில் எது குறைவோ (1,997கிராமங்கள் Xரூ.3,000 X கிராமம் ஒன்றுக்கு 5 தெளிப்பான்கள்) | 9,985 எண்கள் | 2.995500 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | தகவல், கல்வி, தகவல் பரிமாற்றம் (IEC) | ஒரு கிராமத்திற்கு ரூ.4,000/-<br>1. சுவர் விளம்பரம்@ ரூ.1,500 x 2 எண்கள் = ரூ.3,000<br>2. ஆவணப்படுத்துதல் @ LS= ரூ.1,000 | 1,997 கிராமம் | 0.798800 |
| 5 | திட்ட செயலாக்கம் மற்றும் ஆவணப்படுத்துதல்- மாவட்டம் | ஒரு மாவட்டத்திற்கு ரூ.35,000/-<br>1. ஒருங்கிணைந்த கையேடு வழங்குதல்- 100 கையேடு x ரூ. 70=ரூ.7,000<br>2. குறும்படங்கள் தயாரித்தல்- @ ரூ. 18,000 x 1 படம் = ரூ.18,000/-<br>3. புகைப்படஆவணப்படுத்துதல்- ரூ.5,000/-<br>4. சில்லரை செலவினம்- LS ரூ.5,000/- | 37 மாவட்டம் | 0.129500 |
| 6 | திட்ட செயலாக்கம் மற்றும் ஆவணப்படுத்துதல்- மாநிலம் | மாநில அளவில் சில்லரை செலவினம்- LS ரூ.1,00,000/- | மாநிலம் | 0.010000 |
| | | மொத்தம் | | 11.7578 |

(*நீலகிரி மாவட்ட 11 கிராம பஞ்சாயத்துக்கள் நீங்கலாக)

**<u>ஆ தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டப்பணி விபரங்கள் (ரூ. 5.281கோடி)</u>**

| வ. எண் | திட்டம் | ஒரு அலகிற்கான முழு விலை மற்றும் மானியத் தொகை (ரூபாய்) | மொத்த அலகுகள் | நிதி ரூ. கோடி |
|---|---|---|---|---|
| 1 | வீட்டுத்தோட்டம் அமைத்தல் | தளை ஒன்றுக்கு முழு விலை ரூ. 60/-ல் 75 சதவீத மானியமாக ரூ. 45/- | 2,50,000 எண்கள் | 1.125 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்ய ஊக்கத் தொகை வழங்குதல் | 100 சதவீத மானியமாக எக்டர் ஒன்றுக்கு ரூ. 5,000/- | 10,000 எக்டர் | 2.000 |
| 3 | நெகிழிக் கூடைகள் மற்றும் பயிர் பாதுகாப்பு செய்ய ஏதுவாக பிளாஸ்டிக் ட்ரம் விநியோகம் | ஒரு நெகிழிக் கூடை மற்றும் ஒரு 200 லிட்டர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்டிக் ட்ரம் கொண்ட தொகுப்பு ஒன்றுக்கு முழு விலை ரூ.2000/-ல் 50 சதவீத மானியம் ரூ.1,000/- | 28,650 தொகுப்புகள் | 1.146 |
| 4 | விவசாயிகளின் வருமானத்தை பெருக்க வரப்பு ஓரங்களில் பழச்செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நடுதல் | எட்டு பழச்செடிகள் மற்றும் மரக் கன்றுகள் அடங்கிய தொகுப்பு ஒன்றுக்கு ரூ.100/- ல் 100 சதவீத மானியம் | 1,00,000 எண்கள் | 1.000 |
| 5 | திட்ட செயலாக்கம் மற்றும் ஆவணப்படுத்துதல் | சில்லரை செலவினம்- ரூ.1,00,000/- | | 0.010 |
| | மொத்தம் | | | 5.281 |

## இ. வேளாண்மைப் பொறியியல் துறையில் செயல்படுத்தப்படும் திட்ட விவரம் (ரூ. 210.02 கோடி)

| வ. எண் | இனங்களின் விபரம் | செயல் (எண்கள்) | மொத்தத் தொகை (ரூ.கோடி) | தேவைப்படும் நிதி (ரூ.கோடி) |
|---|---|---|---|---|
| 1 | பாசன பரப்பு இல்லாத தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்புகளில் நீர் ஆதாரத்தை (ஆழ்துளைக் கிணறு / குழாய்க் கிணறு) உருவாக்குதல் - 100 சதவீத மானியத்தில் | 1,930 | 215.09 | 183.52 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு - 100 சதவீத மானியத்தில் கிணறுகள் (ஆழ்துளை அல்லது குழாய் கிணறுகள்) அமைத்து மின்மோட்டருடன் நுண்ணீர்ப்பாசன வசதி அமைத்து தருதல். | 200 | 12.00 | 12.00 |
| 3. | பண்ணைக்குட்டைகள் அமைத்தல் - 100 சதவீத மானியத்தில் | 500 | 5.00 | 5.00 |
| 4 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசன குளங்கள் ஊரணிகள், குளங்கள் மற்றும் வரத்து கால்வாய்களை தூர்வாரி மேம்படுத்துதல் - 100 சதவீத மானியத்தில் | 1700 | 9.00 | 9.00 |
| 5 | ஆவணப்படுத்தல் மற்றும் நிர்வாகச் செலவினம் | | 0.50 | 0.50 |
| | மொத்தம் | | 241.59 | 210.02 |

4) வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, பின்வரும் இனங்களின் மீது கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடுகிறது:-

I. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட உள்ள வேளாண்மைத் துறை திட்டங்களுக்கு ரூ.11.7578 கோடியும், வேளாண்மைப் பொறியியல் துறை திட்டங்களுக்கு ரூ.210.0200

கோடியும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை திட்டங்களுக்கு ரூ.5.281 கோடியும் ஆக மொத்தம் ரூ.227.0588 கோடியினை (ரூபாய் இருநூற்று இருபத்து ஏழு கோடியே ஐந்து இலட்சத்து எண்பத்தெட்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும்,

II. வேளாண்மைத் துறை மூலமாக இத்திட்டத்தினை செயல்படுத்திட வழங்கப்படும் ரூ.11.7578 கோடியினை வேளாண்மை இயக்குநர் பெற்று, துணை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை அவர்களுக்கு வழங்க அனுமதியும்,

III. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.5.281 கோடி நிதியினை, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்களுக்கு வழங்க அனுமதியும்,

IV. வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான ரூ.210.0200 கோடி நிதியினை, தலைமைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுக்கு வழங்க அனுமதியும்,

V. கிணறுகளின் வகையும், ஆழமும், மோட்டாரின் குதிரைத் திறனும் (HP), அதற்கான நிதித் தேவையும், ஒவ்வொரு தொகுப்பு நிலங்களின் நிலநீர் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மாறுபடும் நிலையில், முதற்கட்ட நில நீர் ஆய்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,997 கிராமப் பஞ்சாயத்துகளில் 1,572 ஆழ்துளைக் கிணறுகளும், மற்றும் 358 குழாய் கிணறுகளும், அரசாணை எண் 142, பொதுப்பணி (ஆர் 2) துறை, தேதி:23.07.2014-இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தளர்வு செய்து மித அபாயகரமான நுகர்வு (Semi Critical), அபாயகரமான நுகர்வு (Critical) மற்றும் அதி நுகர்வு (Over Exploited) குறுவட்டங்களில் தலைமைப் பொறியாளர் (மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்) அவர்களின் குறிப்புரையின்படி கிணறுகளுக்கான இடைவெளி விதிமுறைகள் பின்பற்றுதல், தேவையான நீர்செறிவூட்டும் கட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு கிணறுகள் அமைத்தல் போன்றவற்றை தவறாமல் பின்பற்ற வேண்டுமென்ற

நிபந்தனையின் அடிப்படையில்-இதனை சிறப்பு நிகழ்வாகக் கருதி பாதுகாப்பான குறுவட்டங்களைத் தவிர்த்து இதர குறுவட்டங்களில் கிணறுகள் அமைக்க சிறப்பு அனுமதி வழங்கியும்,

VI. முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டு திட்டத்தில் செயல்படுத்தப்படும் பண்ணைக் குட்டைகள் மற்றும் வரப்பு அமைத்தல் ஆகிய பணிகள் இத்திட்டத்தில் ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படவுள்ள நிலையில், முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படாத இத்திட்டத்திற்குட்பட்ட கிணறு அமைக்கப்படும் தொகுப்பு கிராமங்களில் நீர் செறிவூட்டும் கட்டுமான அமைப்புகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் செயல்படுத்திட வேளாண்மைத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி வழங்கியும்,

VII. மேற்கூறிய பணிகளில், கிராம அளவிலான தரிசுநிலத் நிலங்களில், கிணற்றின் ஆழம் உத்தேசமாக கணிக்கப்பட்டுள்ளதால் நிதி சேமிப்பு ஏற்படுமாயின், அத்தொகையினை அரசின் அனுமதி பெற்று, அடுத்த ஆண்டில் இத்திட்டப் பணிகளுக்காக செலவிட தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களுக்கு அனுமதி வழங்கியும்,

VIII. இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, கிணறுகள் அமைக்கும் பணியில் உள்ள உபஇனங்களில் (ஆழ்துளைக் கிணறு / குழாய்க் கிணறு) நிலநீர் ஆய்வு மற்றும் நில நீர் ஆய்வு அறிக்கை அடிப்படையில் கிடைக்கக்கூடிய நீரின் அளவு பொறுத்து (Well yield) ஆழ்துளைக் கிணறு / குழாய்க் கிணறுகளின் தேவை அடிப்படையில் அளவுகளில் மாற்றம் செய்துகொள்ள தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல் துறை) அவர்களுக்கு அனுமதி வழங்கியும்,

IX. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தினை செயல்படுத்தப்படும் கிராமங்களில் அனைத்து இனங்களுக்கும் இதர திட்டங்களின் கீழ் வழங்கப்படும் மானிய விகிதத்திற்கு இணையாக வழங்க அறிவுறுத்தியும்,

X. இத்திட்டத்திற்கென மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் தனியாக வங்கிக் கணக்குகள் துவக்கப்பட்டு கணக்குகள் முறையாக பராமரிக்க அறிவுறுத்தியும்,

XI. வேளாண்மை-உழவர் நலத் துறையின் கீழ் செயல்படும் அனைத்துத் துறைகளின் திட்டங்களை 1,997 கிராம பஞ்சாயத்துகளில் ரூ.227.0588 கோடி செலவில் ஒருங்கிணைத்து செயல்படுத்துவது தொடர்பான அனைத்து வேளாண்மை – உழவர் நலத் துறைகளுக்கான பொதுவான திட்ட செயலாக்க வழிமுறைகள் இணைப்பு-I-இல் உள்ளபடியும், வேளாண்மை மற்றும் வேளாண்மை துறை சார்ந்த, துறைவாரியான (இனம் வாரியாக) வழிகாட்டு நெறிமுறைகள் இணைப்பு-II-இல் உள்ளபடியும் கடைபிடித்திட அறிவுறுத்தியும்,

XII. வேளாண்மை - உழவர் நலத் துறையின் மூலம் ஒன்றிய, மாநில நிதி பங்களிப்புடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் பிற திட்டங்களை (Dovetailed Schemes) இணைப்பு – III- இல் உள்ளபடி செயல்படுத்திட அனுமதி வழங்கியும்,

XIII. தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளில் விவசாயிகள் நலன் சார்ந்த அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு, வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலரைத் தலைவராகவும், உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி விதை அலுவலர் அவர்களை கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலராகவும், இதரத்துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு "கிராம திட்ட செயலாக்கக் குழு" ஒன்றினை இணைப்பு-IV இன்படி அமைத்திட அனுமதி வழங்கியும்,

XIV. மாவட்ட அளவில் அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை கண்காணித்திட, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை தலைவராகவும், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலராகவும், இதரத்துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட "மாவட்ட கண்காணிப்புக் குழு" ஒன்றினை இணைப்பு-V இன்படி அமைத்திட அனுமதி வழங்கியும்,

XV. மாநில அளவில், இத்திட்டத்தினை கண்காணித்திட, அரசாணை (டி) எண். 176, வேளாண்மை- உழவர்நலத் (வேஉ.2) துறை, நாள் 29.10.2021 மற்றும் அரசாணை (டி) எண். 13, வேளாண்மை- உழவர்நலத் (வேஉ.2) துறை, நாள் 27.01.2022 இல் அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட 'மாநில அளவிலான உயர்நிலைக்குழு' மூலம் கண்காணிக்க அனுமதி வழங்கியும்,

XVI. 22.12.2021 அன்று அரசு அளவில் கூடிய உயர் மட்டக்குழுவின் அறிவுரைகளின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்" செயல்படுத்தப்படவுள்ள, தேர்வு செய்யப்பட்ட 1,997 கிராம பஞ்சாயத்துகளில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தையும் சேர்த்து செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டநிலையில், நடப்பு நிதி ஆண்டில் 22.12.2021-க்கு முன்னர், 2,500 கிராமங்களில் ஒருங்கிணைந்த திட்டங்கள் (Dovetailed Schemes) மற்றும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதற்கு பின்னேற்பாணை வழங்கியும், 22.12.2021-க்கு பின்னர் புதியதாக தேர்வு செய்யப்பட்ட 1,997 கிராம பஞ்சாயத்துக்களிலும் ஒருங்கிணைந்த திட்டங்கள் (Dovetailed Schemes) மற்றும் புதிய திட்டங்களையும் செயல்படுத்திட அனுமதி வழங்கியும்,

XVII. சூரிய சக்தி மூலம் செயல்படும் பம்புசெட்டுகள் அமைக்கும் பணிகள், பிரதம மந்திரியின் விவசாயிகள் ஆற்றல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத்திட்ட (PM-KUSUM) நிதியிலிருந்தும், பாதுகாப்பான குறு வட்டங்களில் அமைக்க உள்ள அனைத்து கிணறுகள், மின்மோட்டார் பம்புசெட்டுகள் மற்றும் நீர் விநியோக குழாய்கள் அமைக்கும் பணிகள், பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத்திட்டத்தின் துணை நிலை நீர் மேலாண்மை செயல்பாடுகள் (PMKSY - SWMA) நிதியிலிருந்தும் ஒன்றிய அரசின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் நிலையில், மாநில அரசின் பங்களிப்புத் தொகை மற்றும் கூடுதலாக தேவைப்படும் விவசாயிகளின் பங்களிப்புத் தொகை ஆகியவற்றினை "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்

வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி ஒப்பளிப்பு செய்ய அனுமதி வழங்கியும்,

XVIII. வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்களை பயன்படுத்தி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 500 சிறுபாசன குளங்கள், 100 ஊரணிகள், 500 குளங்கள் மற்றும் 600 வரத்து கால்வாய்களை தூர்வாருதல், மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்த அறிவுறுத்தியும் ஆணை வெளியிடப்படுகிறது.

5) உழவர் நலன் சார்ந்த இதரத் துறைகளான 1) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 2) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, 3) கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, 4) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, 5) நீர்வள ஆதாரத் துறை, 6) எரிசக்தி துறை, 7) கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை ஆகிய துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் குறித்து இதர துறைவாரியான விவரங்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் பின்னர் தனியே வெளியிடப்படும்.

6) மேலே பத்தி 4 இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.227.0588 கோடி கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

> 2401 - 00 - பயிர் வளர்ப்பு -104 வேளாண்மைப் பண்ணைகள் – மாநிலச் செலவினங்கள் – AG. கலைஞரின் ஒருங்கிணைந்த கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம் – 311 மானியங்கள் - 01 தனித்திட்ட மானியம்.
> (த.தொ.கு. 2401 00 104 AG 31101)
>
> - ரூ.227.0588 கோடி

7) மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை, வேளாண்மைத் துறை திட்டங்களுக்கு ரூ.11.7578 கோடியை, மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைவர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை அவர்களுக்கும், வேளாண்மைப் பொறியியல் துறை திட்டங்களுக்கு ரூ.210.0200 கோடியை, தலைமைப் பொறியாளர் (வே.பொ.), வேளாண்மைப்

பொறியியல் துறை அவர்களுக்கும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை திட்டங்களுக்கு ரூ.5.281 கோடியை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்களுக்கும், பெற்று வழங்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 81/ADS (GKT)/2022, நாள் 09.03.2022 இல் ஒப்புதலைப் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>

இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை-5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மை பொறியியல் துறை, அண்ணாசாலை, சென்னை-35.
துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி மேம்பாட்டு முகமை, சென்னை-5.
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை-32.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
அரசு முதன்மைச்செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-3.
இயக்குநர், விதைச்சான்று துறை, கோயம்புத்தூர்-3
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை-18.
முதன்மை மாநில கணக்காயர் (E&SSA), சென்னை-18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை-18.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை -9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 9.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.

மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை -9.

தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை -9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.

நிதித் (வேளாண்-உ.ந)த் துறை, சென்னை-9.

வேளாண்மை – உழவர் நலத் (அனைத்துப்பிரிவுகள்) துறை, சென்னை -9,

உதவி நிரலர், வேளாண்மை – உழவர் நலத் துறை, சென்னை-9.

சம்மந்தப்பட்ட கோப்பு எண்.21163/வஇபதி/2021.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
9/3/22

9/3/22

அரசாணை (நிலை) எண். 59, வேளாண்மை-உழவர் நலத்(வஇபதி) துறை, நாள் 09.03.2022.

## இணைப்பு – I

## கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

### அ. அனைத்து துறைகளுக்கான பொதுவான திட்ட செயலாக்க வழிமுறைகள்

1. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம், கிராம பஞ்சாயத்து அளவில் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சி அடைந்திடும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது.
   - i. வேளாண்-உழவர் நலத்துறை திட்டங்களுடன், உழவர் நலன் சார்ந்த வருவாய்-பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் பொது விநியோகத் துறை, எரிசக்தித் துறை, நீர்வள ஆதாரத் துறை, கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை ஆகிய பிற துறை திட்டங்களும் கிராம பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.
   - ii. "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" செயல்படுத்தப்பட்ட கிராமங்கள் மாதிரி கிராமங்களாக அமையும்.
2. திட்டத்தின் நோக்கங்கள்
   - i. கிராமத்தில் உள்ள தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டுவருதல்
   - ii. நீர்வள ஆதாரங்களை பெருக்குதல்.
   - iii. சூரிய சக்தி பம்பு செட்டுகள் அமைத்தல்.
   - iv. வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துதல்.
   - v. நுண்ணீர்ப்பாசன முறையை பின்பற்றுதல்.

vi. கால்நடைகளின் நலன் காத்து பால் உற்பத்தியை பெருக்குதல்.

vii. வருவாய்த்துறையின் மூலம் புதிய பட்டா / பட்டா மாறுதல் வழங்குதல்.

viii. கூட்டுறவு சங்கங்கள் மூலம் அதிக அளவு பயிர் கடன்கள் வழங்குதல்.

ix. கால்வாய் பாசன நீர் வழித்தடங்களை தூர் வாருதல்.

நடப்பு 2021-22 ஆம் ஆண்டில் "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" ரூ.227.0588 கோடி செலவில் மாநில நிதி உதவியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையினால் செயல்படுத்தப்படவுள்ள அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்ட 1,997 கிராம பஞ்சாயத்துகளில் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

3. திட்ட செயல்பாட்டு வழிகாட்டு நெறிமுறைகள்

அ) திட்டம் செயல்படுத்த ஆலோசனை கூட்டம் நடத்துதல்:

மாவட்ட ஆட்சியர் தலைமையில், வேளாண்மை இணை இயக்குநர், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆகிய துறைகளை உள்ளடக்கி மாவட்ட அளவிலான ஆலோசனைக்கூட்டம் நடத்தவேண்டும். கிராம பஞ்சாயத்துகளில் துறைவாரியாக செயல்படுத்தும் திட்டங்களை குறித்து விவாதிக்க வேண்டும்.

ஆ) கிராம பஞ்சாயத்து தேர்வு

i. முதலாம் ஆண்டில், தேர்வு செய்யப்பட்ட 1,997 கிராம பஞ்சாயத்துகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

ii. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பொறுப்பு அலுவலராக உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)/ உதவி விதை அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

4. கிராம திட்ட செயலாக்கக்குழு அமைத்தல்

தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சியில் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த கிராம திட்ட செயல்பாட்டுக்குழு இணைப்பு - IV இன் படி அமைக்கப்பட வேண்டும்.

கிராம திட்ட செயலாக்கக்குழுக்கான பணிகள்

i. கிராம திட்ட செயலாக்கக்குழு விரிவான கிராம வேளாண் வளர்ச்சித் திட்ட அறிக்கையினை படிவம் - II ன்படி தயாரித்து மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற வேண்டும். கிராமங்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், கிராம திட்ட செயலாக்கக் குழுவால், இனம் வாரியாக தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை ( பகுதி இ- இன் படி) கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலர் அவர்களால் கையொப்பமிடப்பட்டு, தொடர்புடைய வேளாண்மை உதவி இயக்குநர் மூலம் வேளாண்மை இணை இயக்குநரின் மேலொப்பம் இடப்பட்டு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியர், தொடர்புடைய துறைகளின் மாவட்ட அலுவலருக்கு அவர்கள் தொடர்புடைய மதிப்பீடுகளை அனுப்பி அத்துறைகளின் மூலம் திட்டம் செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். திட்டம் முடிவுற்றபின் அந்நிதியாண்டின் இறுதி அறிக்கையையும் அனுப்பி வைக்க வேண்டும்.

ii. கிராம திட்ட செயலாக்கக்குழு வாரத்தில் இரண்டு முறை முகாமிட்டு திட்ட செயல்பாட்டை மேற்கொள்ளவேண்டும்.

iii. வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் மூன்று நாட்களுக்கு ஒருமுறை கிராம பஞ்சாயத்துகளில் திட்ட செயல்பாட்டை ஆய்வு செய்யவேண்டும்.

iv. வேளாண்மை உதவி இயக்குநர் / தோட்டக்கலை உதவி இயக்குநர் வாரம் ஒருமுறை திட்ட செயல்பாட்டை ஆய்வு செய்யவேண்டும்.

v. திட்ட செயல்பாட்டில் ஏற்படும் இடர்பாடுகளுக்கு, ஆய்வு அலுவலர்கள் உரிய தீர்வினை விரைந்து வழங்கி திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தவேண்டும்.

vi. திட்டத்தினை கண்காணிக்க கிராமத்திற்கு ஒரு அலுவலர்- வேளாண்மை இணை இயக்குநர், வேளாண்மை துணை இயக்குநர், தோட்டக்கலை துணை இயக்குநர், செயற்பொறியாளர்(வே.பொ), உதவி செயற்பொறியாளர் (வே.பொ), உதவி பொறியாளர் (வே.பொ)/இளநிலை பொறியாளர் (வே.பொ), வேளாண்மை/தோட்டக்கலை உதவி இயக்குநர் பொறுப்புநிர்ணயம் செய்தல்.

vii. செயல்படுத்தப்படும் திட்டங்கள் அந்தந்த திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்பட வேண்டும்.

**5. விவசாயிகளை தேர்வு செய்தல்**

i) தொகுப்பு தரிசு நிலத்திற்குள் அடங்கும் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளின் விபரம் முறையாக சேகரிப்பட வேண்டும்.

ii) தேர்வு செய்யப்படும் விவசாயிகள் கிராம எல்லைக்குள் / அருகில் குடியிருப்பவராக இருக்க வேண்டும்,

**6. தரிசு நில தொகுப்புகளை கண்டறியும் வழிமுறைகள்**

i. கிராம திட்ட செயலாக்கக்குழு, ஊராட்சிக்குட்பட்ட தரிசு நிலம் உள்ள கிராமம்/குக்கிராமங்களை கண்டறியவேண்டும்.

ii. குறைந்தபட்சம் 15 ஏக்கர் தரிசுநிலத் தொகுப்புகள் மற்றும் 15 ஏக்கருக்கு அதிகமாகவும் 35 ஏக்கர் வரை உள்ள தரிசுநிலத் தொகுப்புகள் என இரு வகையான தரிசுநிலத் தொகுப்புகளைக் கண்டறிய வேண்டும்.

iii. ஒரே கிராமத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட தரிசுநில தொகுப்புகள் கண்டறியப்பட்டால் அத்தொகுப்புகளையும் திட்ட செயல்பாட்டில் கொண்டு வரலாம்.

iv. தரிசு நில தொகுப்பில் பழங்குடியினர், ஆதி திராவிடர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் உள்ள தொகுப்புகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

v. தரிசு நில தொகுப்பிற்குட்பட்ட விவசாயிகளில் இரண்டு ஏக்கர் வரை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

vi. ஒவ்வொரு தரிசுநில தொகுப்பும் குறைந்தபட்சம் எட்டு விவசாயிகள் கொண்டதாக இருக்க வேண்டும்.

vii. தரிசு நில தொகுப்பு உரிமையாளர், விவசாயிகள் விவரம் படிவம் – I மற்றும் படிவம் – I (அ), இதர திட்ட பயனாளிகள் விவரம் (படிவம்–II மற்றும் படிவம்–IIஅ) படிவங்களில் சேகரிக்கவேண்டும்.

**7. தரிசு நில தொகுப்புகளை பயிர் சாகுபடிக்கு கொண்டுவருவதற்கான வழிமுறைகள்**

i. கிராம திட்ட செயலாக்க குழு, தரிசு நிலத்திற்கு உட்பட்ட விவசாயிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்த வேண்டும்.

ii. தரிசு நிலத்தில் மண் ஆய்வு, நிலத்தடி நீர் ஆய்வு மற்றும் விவசாயிகளின் ஆலோசனையின்பேரில் பயிரிடத் தகுந்த பயிர்களைத் தேர்வு செய்யவேண்டும்.

iii. தொகுப்பு நிலங்களில் ஆழ்துளை / குழாய்க் கிணறு அமைத்தல் மற்றும் தொகுப்பாக நுண்ணீர்ப்பாசன அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

iv. ஆழ்துளைக் கிணறு/ குழாய்க் கிணறு பொதுவாக அரசு புறம்போக்கில் அமைக்க வேண்டும்.

v. மேற்படி கிணறு, தனிப்பட்ட விவசாயி வயலில் அமைக்கும் பட்சத்தில் பம்பு செட் கட்டமைப்பிற்கு தேவைப்படும் நிலத்தினை அவ்விவசாயி அரசுக்கு தானமாக பதிவுசெய்து வழங்கப்பட வேண்டும்.

vi. தேர்வு செய்யப்பட்ட கிராம பஞ்சாயத்துக்களில் தரிசுநிலத் தொகுப்பில் உள்ள விவசாயிகளையும் சேர்த்து மொத்தம் 20 விவசாயிகளை இணைத்து உழவர் ஆர்வலர் குழு (Farmers

Interest Group) அமைத்திட வேண்டும். தொகுப்பு நிலத்தில் ஆழ்துளைக் கிணறு/ திறந்தவெளிக் கிணறு அமைப்பது, நீர் இறைப்பதற்கு மின் இணைப்பு அல்லது சூரிய சக்தி பம்புசெட் அமைப்பது ஆகியன வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செய்யப்படவேண்டும்.

vii. குறைந்த நீர்த் தேவையுடைய பயிர்கள் மட்டுமே சாகுபடி செய்யப்பட வேண்டும்.

viii. திறந்த கால்வாய்ப் பாசனத்திற்கு அனுமதி இல்லை.

ix. பலன் தரும் வரப்பு மரப்பயிர் / வேளாண் / தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்திட ஊக்குவித்திடலாம்.

**8. திட்ட கண்காணிப்பு குழுக்கள்**

**மாவட்ட கண்காணிப்புக்குழு**

i. மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட கண்காணிப்புக்குழு இணைப்பு-Vஇன் படி அமைக்கப்பட வேண்டும்.

ii. மாவட்ட கண்காணிப்புக்குழு மாதம் இரு முறை திட்ட செயல்பாட்டைத் தணிக்கை செய்யும்.

iii. மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் உழவர் நலன் தொடர்புடைய இதர துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைப்பு திட்டங்களுக்கு (Dovetailed Scheme) அந்தந்த மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அவர்கள் ஒருங்கிணைப்பு அலுவலராக (Co-ordinating Officer) செயல்பட வேண்டும்.

**மாநில கண்காணிப்புக்குழு**

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட வேளாண் உழவர் நலத்துறையின் முக்கிய திட்டங்களை ஆய்வு செய்திட தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில உயர்நிலைக்குழு மாதமொருமுறை அல்லது தேவைக்கேற்ப திட்ட செயல்பாட்டை ஆய்வு செய்யும்.

9. தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம் (IEC)

மாவட்ட ஆட்சித்தலைவரின் ஒப்புதலுடன் வேளாண்மை இணை இயக்குநர்கள் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்த பத்திரிகைச் செய்திகள், சுவர் விளம்பரங்கள், விளம்பரப்பலகைகள், துண்டு பிரசுரங்கள், தொலைக்காட்சி செய்திகள், வானொலி, சமூக வலைதளம் போன்ற தகவல் மற்றும் தகவல் பரிமாற்ற செய்திகளை வழங்குவார்கள்.

10. ஆவணப்படுத்துதல்

மாவட்ட கண்காணிப்புக்குழு, மாவட்ட அளவில் திட்ட செயலாக்கம் குறித்து

i. <u>கிராம அளவில் கிராம வரைபடம், வட்டார வரைபடம், கிராம குறிப்புரை மற்றும் கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலர் விவரங்களுடன், திட்டத்திற்கு முன்பாகவும், பின்பாக்வும் கிராம திட்ட கையேடு தயாரிக்க வேண்டும்.</u>

ii. <u>திட்டம் குறித்து கிராம, மாவட்ட அளவில் விளம்பரங்கள் செய்யவேண்டும்.</u>

iii. மாவட்ட அளவில் திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்து கிராமங்களுக்கான திட்ட கையேடுகளை ஒருங்கிணைத்து மாவட்ட அளவில் ஒட்டுமொத்த கையேடு தயாரித்து வெளியிட வேண்டும்.

மாவட்ட ஆட்சித்தலைவரின் வழிகாட்டுதலின்படி கிராம பஞ்சாயத்துகளில் செயல்படுத்தப்படும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் ஆரம்பக்கட்ட ஆய்வு, பயிற்சிகள், செயல்விளக்கங்கள், விவசாயிகளின் வெற்றிக்கதைகள் ஆகியவற்றை வேளாண்மை இணை இயக்குநர்கள் ஆவணப்படுத்திட நடவடிக்கை எடுப்பார்கள்.

11. வாராந்திர / மாதாந்திர / ஆண்டு - திட்ட முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்தல்.

i. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ், நேரடியாக செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு, அந்தந்த துறைத்தலைவர்களே முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

ii. வேளாண்மை – உழவர்நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைப்பு திட்டங்களுக்கு (Dovetailed Schemes) அந்தந்த துறைத்தலைவர்களே முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

iii. வேளாண் துறை அல்லாத பிற துறைகளின் இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான முன்னேற்ற அறிக்கைகளை அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

iv. மேலே கூறப்பட்ட துறைகள் தொடர்புடைய முன்னேற்ற அறிக்கைகளை கண்காணித்து ஆய்வு செய்து, அவ்வறிக்கைகள் உரிய காலத்தில் அனுப்பப்படுவதை அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் உறுதி செய்யவேண்டும்.

12. திட்ட மதிப்பீட்டு ஆய்வு

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டம் குறித்து மாதம்தோறும் ஆய்வுக் கூட்டம் நடத்தி திட்ட முன்னேற்றம் குறித்து அரசுக்கு ஒவ்வொரு மாதம் 10ஆம் தேதிக்குள் அறிக்கை அனுப்ப வேண்டும்.

## ஆ. வேளாண் மற்றும் வேளாண் துறை சார்ந்த துறை வாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்- வழிகாட்டு நெறிமுறைகள்

1. **வேளாண்மைத்துறை**

**பணிகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள்**

i. கிராம திட்ட செயலாக்கக்குழு கண்டறிந்த தரிசு தொகுப்பு நிலங்களில் மண் பரிசோதனை செய்தல்.

ii. தரிசு தொகுப்பு நிலங்களில் பயிரிடக்கூடிய பயிர்களை விவசாயிகளுடன் கலந்து ஆலோசித்து தேர்வு செய்தல்.

iii. தரிசு தொகுப்பு நிலங்களில் உள்ள சிறு, சிறு முட்புதர்களை அகற்றி சாகுபடி நிலமாகக் கொண்டு வரத் தேவையான ஏற்பாடுகளை செய்ய விவசாயிகளுக்குத் தக்க உதவிகள் அளிக்கப்படும்.

iv. அடர்ந்த முட்புதர்கள் உள்ள தரிசு தொகுப்பு நிலங்களில் தேசிய வேளாண்வளர்ச்சித்திட்ட தரிசு நில மேம்பாட்டு திட்டத்தினை விவசாயிகள் பங்களிப்புடன் மேற்கொள்ளுதல்.

v. முட்புதர்களை அகற்றிய தொகுப்பு நிலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மானாவாரிப்பகுதி மேம்பாட்டுத் திட்டக் கூறுகளை ஒருங்கிணைத்து வேளாண் இடுபொருட்கள் வழங்குதல்.

vi. தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சியில் சாகுபடி செய்யப்படவுள்ள வேளாண் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்கத் தேவையான தொழில் நுட்பங்கள்வழங்குதல். தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு, ஜிப்சம் ஏக்கருக்கு 200 கிலோ, பயிர் வளர்ச்சிகுன்றி, பழுப்பு/ மஞ்சள் நிறமாக குறைபாடு காணப்பட்டால் ஜிங்க்சல்பேட் ஏக்கருக்கு 10 கிலோ வழங்குதல், தார்பாய் வழங்குதல். வேளாண் உபகரணங்கள் மற்றும் கைத்தெளிப்பான்கள் வழங்குதல்.

vii. விவசாயிகள் வரப்புப்பயிரினை பயிர் செய்திட ஊக்குவிக்கவேண்டும். வரப்புப்பயிராக உளுந்து அல்லது தட்டைபயறு அல்லது பாசிப்பயறு அல்லது துவரை ஏக்கருக்கு 2 கிலோ, விதை விநியோகம் செய்தல். திட்டம் செயல்படுத்தப்படும்

கிராமங்களை பசுமையாக மாற்றம் செய்திட வேண்டும். தென்னங்கன்று, பனை விதை, பழ மரக்கன்றுகள், பலன்தரும் மரக்கன்றுகள் விநியோகம் செய்தல் மற்றும் வரப்போரங்களில் மரக்கன்றுகள் நடுதல். தரிசு நிலங்களில் மலைவேம்பு, இலுப்பை, புங்கன் போன்ற மரங்களை விவசாயிகளின் விருப்பப்படி வழங்குதல்.

viii. நுண்ணீர்ப்பாசன முறைகளைத் தொகுப்பு அடிப்படையில் அமைத்திட வேண்டும்.

ix. தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சியில் தரிசு நில தொகுப்பு அல்லாத இதர விவசாயிகளுக்கு தேவையான திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் இதர திட்ட பயனாளிகளின் விவரம் சேகரித்தல்.

x. தேவையான இடுபொருட்களை உரிய நேரத்தில் கிராமக் கூட்டங்கள் வாயிலாக பயனாளிகளுக்கு வழங்குதல்.

xi. இத்திட்டத்திற்குத் தேவையான இடுபொருட்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட வேண்டும். மேலும் டான்சிடா மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பில் இல்லாத இடுபொருட்கள் / கூடுதல் அளவு தேவைப்படும் இடுபொருட்களை வெளிச்சந்தையில் வாங்கும் பட்சத்தில் தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத் தன்மைக்கான சட்டம் 1998 மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000, 2012-இல் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி மாவட்ட அளவிலான வேளாண் இடுபொருட்கள் கொள்முதல் குழு மூலம் கொள்முதல் செய்தல்.

xii. அறுவடை மற்றும் சந்தைப்படுத்தும் வரை விவசாயிகளுடன் ஒருங்கிணைந்து திட்டத்தை செயல்படுத்துதல்.

xiii. கிராம ஊராட்சியில் எதிர்பார்க்கப்படும் வேளாண் விளைபொருட்களின் மகசூல் அளவினை முன் மதிப்பீடு செய்தல்.

xiv. முன்மதிப்பீட்டின்படி எதிர்பார்க்கப்படும் வேளாண் விளைபொருட்கள் மகசூல் விவரங்களை, வேளாண்

விற்பனைத்துறைக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு வழங்குதல்.

xv. தேர்வு செய்யப்படும் கிராம ஊராட்சி விவசாயிகள், அரசின் ஒன்றிற்கு மேற்பட்ட திட்டங்களில் பயன்பெறலாம். தொழில்முனைவோருக்கு அக்ரிகிளினிக் அமைத்தல். உரம், பூச்சிமருந்து இடுபொருள் விற்பனை உரிமம் வழங்குதல்.

xvi. அட்மா திட்டத்தில் செயல்படும் உழவர் நண்பர்களை இத்திட்டத்தில் பங்குபெறச் செய்து அக்கிராம பஞ்சாயத்தில் உள்ள விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

xvii. அட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் "பண்ணைப் பள்ளி" பயிற்சியினை இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் கண்டிப்பாக செயல்படுத்திடல் வேண்டும்.

xviii. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மொத்தக் கூறுகளையும் ஒருங்கிணைத்து செவ்வனே செய்திடல் வேண்டும்.

**2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை பணிகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள்**

i. கிராம திட்ட செயலாக்கக் குழுவினால் கண்டறியப்பட்ட தரிசு நிலத் தொகுப்பு நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்வதற்கு ஆய்வு செய்து வழிவகை செய்தல்.

ii. கிராம திட்ட செயலாக்கக் குழு கண்டறிந்த தரிசு நிலங்களுக்கேற்ற தோட்டக்கலைப் பயிர்களை தேர்வு செய்து சாகுபடி மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

iii. தேர்வு செய்யப்படும் கிராமத்தில், தொகுப்பு தரிசு நில விவசாயிகளுடன், இதர விவசாயிகளுக்கும் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.

iv. வீட்டுத்தோட்டம் அமைக்க ஊக்குவித்தல்.

v. திட்டம் செயல்படுத்தப்பட உள்ள கிராமத்தில் தோட்டக்கலைப் பயிர்கள் மகசூல் எதிர்பார்ப்பினை முன் மதிப்பீடு செய்தல்.

vi. மகசூல் எதிர்பார்ப்பு விபரத்தினை வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைக்கு வழங்கி சந்தைப்படுத்த வழிவகை செய்தல்.

3. **வேளாண்மை பொறியியல் துறை**

**பொது வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. கிராம திட்ட செயலாக்கக்குழு கண்டறிந்த தரிசு நில தொகுப்பு விவசாயிகளுடன் ஆலோசனை செய்தல்.

ii. தரிசு தொகுப்பு நிலங்களில் நீர்வள ஆதாரம் கண்டறிந்து, திட்ட மதிப்பீடு தயாரித்தல்.

iii. தொகுப்பு தரிசு நிலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நீர்வள ஆதாரம் இருப்பின் ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு அமைத்து சூரிய சக்தி / மின்சார வசதி ஏற்படுத்தி பம்பு செட்டுக்களுடன் தேவையான கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்.

iv. நிலத்தடி நீர் இல்லாத நிகழ்வுகளில் நீர் சேமிப்பு கட்டமைப்புகளான பண்ணை குட்டைகள் அமைத்தல்.

v. பாசன நீர் ஆதாரங்களை உருவாக்கும் பணிகள் மற்றும் பண்ணைக்குட்டைகள் அமைத்தல் ஆகிய திட்டப்பணிகளுக்கான மதிப்பீடுகள் கள ஆய்வின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு, தொழில் நுட்ப ரீதியில் உபகோட்ட அளவில் சரிபார்க்கப்பட்டு, உதவி செயற் பொறியாளர் / செயற்பொறியாளர் / கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ)களால் உரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

vi. மேற்படி பணிகள் உரிய அலுவலர்களால் ஒப்பந்தப்புள்ளி (Tamil Nadu Transparency In Tenders Act, 1998) அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

vii. அனைத்து பணிகளும் நடைபெறும் பொழுது பல்வேறு நிலைகளில் உதவி செயற் பொறியாளர் / செயற்பொறியாளர் /

கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ) அகியோர்களால் அவற்றின் தரம் மற்றும் முன்னேற்றம் குறித்து கண்காணிக்கப்பட வேண்டும்.

viii. பணிகளின் அனைத்து நிலைகளிலும் புகைப்படம் மற்றும் வீடியோ ஆவணப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ix. வேளாண்மைப் பொறியியல் துறைக்கும் உழவர் ஆர்வலர் குழு சங்க விவசாயிகளுக்கும் இடையிலேயான கூட்டு ஒப்பந்தம், சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் பராமரிக்கப்பட வேண்டும்.

x. ஒவ்வொரு தொகுப்பிலும் மேற்கொள்ளப்படும் பணி குறித்த விவரங்கள் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் தனியாக ஒரு பதிவேட்டில் பராமரிக்கப்பட வேண்டும்.

xi. தொகுப்பில் உள்ள விவசாயிகளின் நிலப்பரப்பிற்கு ஏற்றவாறு நீர்பங்கீடு செய்வதற்கு ஏதுவாக உழவர் ஆர்வலர் குழுவிற்கு சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வே.பொ)களால் உரிய அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும்.

xii. திட்ட செயலாக்கத்தின் போது திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது பின்பற்ற வேண்டும்.

## 4. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை பணிகள் :

i. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியம் (TANSAMB) மூலம் விலை ஆதரவுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட விளை பொருள்களை கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்தல்.

ii. வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் முன்மதிப்பீடு செய்து தெரிவிக்கப்படும் விளைபொருட்களை அருகாமையில் உள்ள உழவர் சந்தையில் சந்தைப் படுத்த விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும்.

iii. தேர்வு செய்யப்பட்ட கிராமத்தில் உழவன் செயலி கொண்டு நடப்பு சந்தை விலை விவரங்களையும் குறைந்தபட்ச ஆதரவு

விலையையும் விவசாயிகள் அறிந்து விளை பொருட்களை சரியான விலைக்கு விற்பனை செய்திட தேவையான பயிற்சியளித்தல்.

iv. திட்டம் செயல்படுத்தும் கிராமத்தில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தின் அமைவிடம் பயன்பாடு குறித்து விழிப்புணர்வு செய்தல்.

v. தோட்டக்கலை விளைப்பொருட்களை வேளாண் விற்பனை துறை குளிர்பதன கிடங்குகளில் பாதுகாத்து விற்பனை செய்திட வழிவகை செய்தல்.

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர் 9/3/22

9/3/22

அரசாணை (நிலை) எண். 59, வேளாண்மை-உழவர் நலத்(வஇபதி) துறை, நாள் 09.03.2022.

இணைப்பு – II

## துறை வாரியான வழிகாட்டு நெறிமுறைகள் (இனம் வாரியாக)

## வேளாண்மைத் துறை திட்டத்தின் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள்

1. **தென்னங்கன்று விநியோகம்**

   i. நெட்டை தென்னங்கன்றுகள் விநியோகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

   ii. விநியோகத்தின்போது அதிக அளவில் குறு / சிறு விவசாயிகள் பயனடைதல் வேண்டும்.

   iii. ஒரு பண்ணைக் குடும்பத்திற்கு அதிகபட்சம் 3 நெட்டை தென்னங்கன்றுகள் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

   iv. நெட்டை தென்னங்கன்று ஒன்றுக்கு அதிகபட்ச மானியம் ரூ.50/- மட்டும் 100 சதவிகித மானியத்தில் வழங்கப்பட வேண்டும்.

   v. **இத்திட்டத்திற்கு தேவையான அனைத்து நெட்டை தென்னங்கன்றுகள் அரசு தென்னை நாற்றுப்பண்ணை மற்றும் தோட்டக்கலைத் துறை மூலம் உற்பத்தி செய்து தமிழ்நாடு விதைகள் மேம்பாட்டு முகமை வாயிலாக வழங்கப்பட வேண்டும்.**

2. வரப்புப்பயிர் -துவரை, உளுந்து, பச்சைப்பயறு தட்டைப்பயறு

   i. இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் ஒரு கிராமத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவிற்கு மட்டுமே இடுபொருள் விநியோகம் செய்யப்படவேண்டும்.

   ii. இவ்வினத்தின் கீழ், எக்டர் ஒன்றுக்கு துவரை, உளுந்து, பச்சைப்பயறு மற்றும் தட்டைப்பயறு ஆகியவற்றின் விதைகள் அப்பகுதியின் தேவைகேற்ப தேர்வு செய்து பரிந்துரை

செய்யப்பட்ட அளவான எக்டருக்கு 5 கிலோ விதை என்ற அளவில் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

iii. வரப்புப் பயிர் விதைகள் எக்டர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ. 375 மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

iv. விநியோகத்தின்போது அதிக அளவில் குறு / சிறு விவசாயிகள் பயனடைதல் வேண்டும்.

v. தனி நபர் விவசாயி ஒருவருக்கு அதிகபட்சமாக ஒரு எக்டருக்கு மட்டுமே மானியம் வழங்கப்பட வேண்டும்.

vi. **தேவையான பயறு விதைகள் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும்.**

**3. பயிர் பாதுகாப்பு கருவிகள் விநியோகம்**

**அ) கைத்தெளிப்பான் விநியோகம் (Manually Operated)**

i. இவ்வினத்தின் கீழ் மானியமாக ஒரு கைத்தெளிப்பானுக்கு ரூ.750 அல்லது 50 சதவீதம் இதில் எது குறைவோ அந்த தொகை மட்டுமே மானியமாக வழங்கப்பட வேண்டும்.

ii. தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் ஒதுக்கீடு செய்யப்படும் கைத்தெளிப்பான்கள், ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஒரு கைத்தெளிப்பான் மட்டும் வழங்கப்பட வேண்டும்.

iii. சிறு / குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு கைத்தெளிப்பான்கள் விநியோகத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

iv. **கைத்தெளிப்பான்கள் வேளாண் பொறியியல் துறை மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.**

**ஆ) விசைத்தெளிப்பான் விநியோகம் (Power / Battery Operated)**

i. இவ்வினத்தின் கீழ் மானியமாக ஒரு விசைத்தெளிப்பானுக்கு ரூ.3,000 அல்லது 50 சதவீதம் இதில் எது குறைவோ அந்த தொகை மட்டுமே மானியமாக வழங்கப்பட வேண்டும்.

ii. தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் ஒதுக்கீடு செய்யப்படும் விசைத்தெளிப்பான்கள், ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஒரு கைத்தெளிப்பான் மட்டும் வழங்கப்பட வேண்டும்.

iii. சிறு / குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு கைத்தெளிப்பான்கள் விநியோகத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

iv. விசைத்தெளிப்பான்கள் வேளாண் பொறியியல் துறை மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

4. தகவல், கல்வி, தகவல் பரிமாற்றம் (IEC)

i. திட்ட செயலாக்கம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்வு செய்யப்பட்ட கிராமம் ஒன்றில் இரண்டு இடங்களிலாவது திட்டம் தொடர்பான சுவர் விளம்பரங்கள் எழுதப்பட வேண்டும்.

ii. ஒரு சுவர் விளம்பரத்திற்கு அதிகபட்சமாக ரூ.1,500/- வரை வழங்கலாம்.

iii. திட்ட செயலாக்கம் தொடர்பான விபரங்களை ஆவணப்படுத்தும் நோக்கில் வெவ்வேறு கால இடைவெளியில் திட்டம் தொடர்பான முன்னேற்றங்களை ஆவணப்படுத்தும் பொருட்டு கிராமம் ஒன்றிற்கு ரூ.1,000/- வரை ஒட்டு மொத்த தொகையாக (Lumpsum) இவ்வினத்தின் கீழ் செலவிடலாம்.

5. திட்ட செயலாக்கம் மற்றும் ஆவணப்படுத்துதல் - மாவட்டம்

i. இவ்வினத்தின் கீழ் மாவட்ட அளவில் திட்ட செயலாக்கம் தொடர்பான பணிகள் மற்றும் ஆவணப்படுத்தலுக்காக மாவட்டம் ஒன்றிற்கு மொத்தம் ரூ.35,000/- வழங்கப்பட்டுள்ளது.

ii. மாவட்டம் ஒன்றிற்கு ஒருங்கிணைந்த கையேடு 100 எண்ணிக்கையில் தயாரித்து வழங்கிட கையேடு ஒன்றுக்கு ரூ.70/- வரை செலவினம் மேற்கொள்ளலாம்.

iii. குறும்படங்கள் தயாரிப்பதற்காக மாவட்ட அளவிலான ஒரு படத் தயாரிப்பிற்கு ரூ.18,000/- வரை வழங்கலாம்.

iv. மாவட்டம் ஒன்றிற்கு புகைப்பட ஆவணப்படுத்தலுக்கு ரூ.5,000 மற்றும் சில்லரை செலவினமாக (Lumpsum) ரூ.5,000 செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**6. திட்ட செயலாக்கம் மற்றும் ஆவணப்படுத்துதல் - மாநிலம்**

மாநில அளவில் திட்ட செயலாக்கத்திற்காக, ரூ.1,00,000/-னை ஆவணப்படுத்துதல், ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவதற்கான செலவினங்கள், உணவு வழங்குதல், பயணம் மேற்கொள்ளுவதற்கான வண்டி வாடகை வழங்குதல் மற்றும் சில்லரை செலவினம் (Lumpsum) மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**<u>தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை திட்டத்தின் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள்</u>**

**1. வீட்டுத்தோட்டம் அமைப்பதற்கான தளைகள் விநியோகம்**

i. பஞ்சாயத்து கிராமம் ஒன்றிற்கு 100 தொகுப்புகள் வீதம்2 இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டுத் தோட்டம் அமைத்து தற்சார்பு முறையில் காய்கறிகள் உற்பத்தியை மேற்கொள்ள ரூ.60 மதிப்பிலான 8 வகையான காய்கறி விதைகள் மற்றும் 2 கிலோ மண்புழு உரம் அடங்கிய தொகுப்பு 75 சதவீத மானியத்தில் வழங்கப்பட வேண்டும்.

ii. வீட்டுத்தோட்ட தொகுப்புகள் விநியோகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பத்திற்கு முன்னுரிமை அடிப்படையில் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

iii. விநியோகத்தின் போது அதிக அளவில் குறு, சிறு மற்றும் பெண் விவசாயிகள் பயனடைதல் வேண்டும்.

iv. ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சம் ஒரு தொகுப்பு மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

v. விவசாயிகளின் பங்குத் தொகையாக தொகுப்பு ஒன்றிற்கு ரூ.15 செலுத்தப்பட வேண்டும்.

2.தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்

i. பாரம்பரிய தோட்டக்கலைப் பயிர்களை பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் ஊக்கத் தொகை அல்லது இடுபொருட்கள் 100 சதவீத மானியத்தில் ரூ.5000/எக்டர் மொத்தம் 10,000 எக்டர் பரப்பிற்கு வழங்கப்படும்.
ii. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.
iii. விநியோகத்தின் போது அதிக அளவில் குறு, சிறு மற்றும் பெண் விவசாயிகள் பயனடைதல் வேண்டும்.
iv. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஒரு எக்டருக்கு மட்டுமே மானியம் வழங்கப்பட வேண்டும்.

3. நெகிழிக் கூடைகள் மற்றும் பிளாஸ்டிக் டிரம் விநியோகம்

i. தேர்வு செய்யப்பட்ட கிராம பஞ்சாயத்துகளில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ரூ.2,000 மதிப்புள்ள ஒரு நெகிழி கூடை மற்றும் பயிர் பாதுகாப்புப் பணிக்காக 200 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பிளாஸ்டிக் டிரம் கொண்ட தொகுப்பு 50 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.
ii. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.
iii. விநியோகத்தின் போது அதிக அளவில் குறு, சிறு மற்றும் பெண் விவசாயிகள் பயனடைதல் வேண்டும்.
iv. ஒரு பண்ணை குடும்பத்திற்கு ஒரு நெகிழிகூடை மற்றும் பயிர் பாதுகாப்புப் பணிக்காக 200 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பிளாஸ்டிக் டிரம் கொண்ட ஒரு தொகுப்பு மட்டுமே வழங்கப்பட வேண்டும். விவசாயிகளின் பங்குத் தொகையாக ரூ.1000/- செலுத்தப்பட வேண்டும்.

**4. விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க வரப்பு ஓரங்களில் பழச்செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நடுதல்**

i. தேர்வுசெய்யப்பட்ட 2,500 கிராம பஞ்சாயத்துகளில் தரிசு நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த, பப்பாளி, முருங்கை, சீதா, நெல்லி, அத்தி, வேம்பு, தேக்கு மற்றும் புளி போன்ற எட்டு பழச்செடிகள் மற்றும் மரக்கன்றுகள் அடங்கிய தொகுப்பு ஒன்றுக்கு ரூ.100/- வீதம் 1, 00,000 மரக்கன்று தொகுப்புகள் 100 சதவீத மானியத்தில் வழங்கப்படும். மேற்கண்ட செடிகளை விவசாயிகள் வரப்பு ஓரங்களில் நட்டு பயன் பெறலாம்.

ii. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

iii. விநியோகத்தின் போது அதிக அளவில் குறு, சிறு மற்றும் பெண் விவசாயிகள் பயனடைதல் வேண்டும்.

iv. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஒரு மரக்கன்று தொகுப்பு மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

## <u>வேளாண்மைப் பொறியியல் துறை திட்டத்தின் இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள்</u>

**1) பாசன பரப்பு இல்லாத தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்புகளில் நீர் ஆதாரத்தை (ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு) உருவாக்குதல் (100 சதவிகித மானியம்).**

i. வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறைகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட உழவர் ஆர்வலர் குழுக்களைக் கொண்ட தொகுப்புகளில் நீர் ஆதாரத்தை உருவாக்குதல்.

ii. மானாவாரி தரிசு நிலங்களின் தொகுப்புகளில் நிலநீர் ஆய்வின்படி ஆழ்துளைக் கிணறு / குழாய்க் கிணறு அமைத்தல், மின் சக்தி / சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்தல், பாசன நீர் விநியோக குழாய்கள் அமைத்தல் மற்றும் அருகில் உள்ள மின் கம்பத்திலிருந்து பம்பு செட் வரை நீர்

இறைப்பதற்கு மின் விநியோக இணைப்பு வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

**நிலநீர் ஆய்வு:**

i. நிலத்தடி நீர்வளம் உள்ள சரியான இடத்தினை தேர்வு செய்வதற்காக வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி புவியியலாளர்கள்/ தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் புவியியலாளர்கள்/ மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் ஆதார தரவு மையம், நீர்வளத்துறை பொதுப் பணித்துறையின் புவியியலாளர்கள் அல்லது தனியார் நிறுவனம் மூலம் நிலநீர் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

ii. நிலநீர் ஆய்வின் அடிப்படையில் மண்ணின் தன்மைக்கு ஏற்ப ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு/ அமைத்தல் முடிவு செய்யப்படும்.

**ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு அமைத்தல்**

i. நிலநீர் ஆய்வின்படி ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு அமைக்கப்படும்.

ii. சமுதாய நிலங்களில் நிலத்தடி நீர் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். நிலநீர் ஆய்வின் அடிப்படையில் குழாய்க் கிணறு தேவைப்படின் சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் (வே.பொ) மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ), அவர்களின் பரிந்துரை பெற்று பரிசீலிக்கப்படும். சமுதாய நிலங்களுக்கான புறம்போக்கு அல்லது மேய்ச்சல் புறம்போக்கில் ஆழ்துளைக் கிணறு/ குழாய்க் கிணறு அமைப்பதற்கும் பம்பு செட் நிறுவுவதற்கும் வருவாய்த் துறையிடம் தேவையான அனுமதி பெறவேண்டும்.

iii. கிணறு அமைப்பதற்கு சமுதாய நிலம் கிடைக்கவில்லை என்றால், விவசாய குழுக்களே நிலங்களை பெற்றுத்தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தத்தில்

நிலத்தை வைத்திருக்கும் தனிநபர் (குழுவில் உள்ள விவசாயிகளில் ஒருவர்) பட்டா நிலத்தை அரசுக்கு தானமாக எழுதி கொடுக்க ஒப்புதல் அளிக்க வேண்டும். இந்த ஒப்பந்தம் ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு அமைக்கும் பகுதியிலுள்ள நில உரிமையாளரால் மின் சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்பதற்கு 100 சதுர அடியும் (10 அடி x 10 அடி), சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்பதற்கு 900 சதுர அடியும் (30 அடி x 30 அடி) நிலப்பரப்பினை தானமாக வழங்கிட முன்வர வேண்டும்.

iv. இத்திட்டத்தின் மூலம் கிணறுகள் அமைத்து மின் இணைப்பை பெறுவதற்கு வேளாண்மைத்துறையால் கண்டறியப்பட்டு ஏற்படுத்தப்பட்ட தொகுப்புகளுக்கு உதவி வேளாண் இயக்குநர் பெயரிலும், தோட்டக்கலைத்துறையால் கண்டறியப்பட்டு ஏற்படுத்தப்பட்ட தொகுப்புகளுக்கு உதவி தோட்டக்கலை இயக்குநர் பெயரிலும் விண்ணப்பித்து, அவர்கள் பெயரில், மின் இணைப்பு பெற வேண்டும். இதன்பொருட்டு, கிணறு அமைக்கும் இடத்திற்கு உரிய அனுமதியினை வருவாய்த் துறையிடமிருந்து விவசாய ஆர்வலர் குழுக்கள் பெறுவதற்கு அரசு துறை அலுவலர்களால் உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட வேண்டும்.

v. ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு பகுதிக்கு அணுகு சாலைக்காக நிலத்தை விட்டுக்கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து நில உரிமையாளர்களும் (குழுவில் உள்ள விவசாயிகள்) சம்மதம் தெரிவித்து ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும்.

vi. விவசாயிகள் குழு உறுப்பினர்களிடையே (நிலத்தின் அளவைப் பொறுத்து) தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

vii. உருவாக்கப்பட்ட நீர் ஆதாரம் அதாவது, ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறுகளிலிருந்து நிலத்தடி நீர் குழுவில்

உள்ள அனைத்து தனிப்பட்ட விவசாயிகளுக்கும் பிவிசி குழாய் மூலம் இணைக்கப்பட்டு பயன்படுத்தப்படும்.

viii. இரண்டு கிணறுகளுக்கும் இடையிலான தூரம் (தற்போதுள்ள கிணறுகள் அல்லது புதிதாக உருவாக்கப்பட்டவை) கிணறுகளின் நீர் ஆதாரம் குறுக்கிடுவதற்கான சாத்தியக்கூறுகளைத் தடுக்க ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்சம் 100 மீ இடைவெளி இருக்க வேண்டும்.

ix. நிலத்தடி நீர் ஆதாரம் உருவாக்குவதற்கு, கடினப்பாறை பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகளும் வண்டல் மண் பகுதிகளில் குழாய்க் கிணறுகளும் மின் சக்தி / சூரிய சக்தி இணைப்புடன் அமைக்கப்படும்.

x. ஆழ்துளைக் கிணறு /குழாய்க் கிணறு ஆகியவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற தண்ணீரின் அளவின் அடிப்படையிலும், மண் பரிசோதனை மற்றும் விவசாய குழுக்களின் விருப்பத்திற்கேற்றவாறும் சாகுபடிக்கு ஏற்ற பயிரினை வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகளின் மூலம் பரிந்துரை செய்யப்படும்.

xi. பொதுவாக குறைந்தபட்சம் 15 ஏக்கர் வரை கொண்ட தொகுப்புகளில் ஒரு சமுதாய கிணறு அமைக்கவும், 15 ஏக்கருக்கு அதிகமாக உள்ள தொகுப்புகளில் 2 சமுதாய கிணறுகளும் அமைக்கப்படும்.

xii. உதவி புவியியலாளரின் கள ஆய்வின் அடிப்படையில் 15 ஏக்கர் வரை கொண்ட தொகுப்புகளில் கிணறுகளின் நீர் இருப்பு தேவையான அளவு இல்லாத நிகழ்வுகளில் சம்பந்தப்பட்ட செயற் பொறியாளர் (வே.பொ) அவர்கள் கூடுதலாக மேலும் ஒரு சமுதாய கிணறு அமைத்திட அனுமதி வழங்கலாம்.

xiii. உதவி புவியியலாளரின் கள ஆய்வின் அடிப்படையில் 15 முதல் 35 ஏக்கர் வரை கொண்ட தொகுப்புகளில் கிணறுகளின் நீர் இருப்பு தேவையான அளவு இல்லாத நிகழ்வுகளில் சம்பந்தப்பட்ட

செயற் பொறியாளர் (வே.பொ) அவர்கள் கூடுதலாக மேலும் ஒரு சமுதாய கிணறு அமைத்திட அனுமதி வழங்கலாம்.

xiv. இத்திட்டத்தின் அனைத்து பணிகளும் ஜியோ டேக்கிங் (Geo tagging) மூலம் பதிவேற்றம் செய்யப்படும்.

xv. இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அனைத்து கட்டமைப்புகளும் விவசாய ஆர்வலர் குழுக்களிடம் ஒப்படைக்கப்படும். அந்த குழுக்களில் உள்ள விவசாயிகளே அவர்களின் சொந்த செலவில் மேற்கண்ட கட்டமைப்புகளின் பராமரிப்பினை மேற்கொள்ள வேண்டும்.

xvi. இத்திட்டத்தில் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளின் கூட்டுப் பயன்பாட்டிற்கும், பராமரித்தலுக்கும் உரிய விவசாயிகளின் பங்கேற்பினை விவசாயிகளுக்கிடையேயான ஒப்பந்தத்தின் மூலம் இத்திட்டத்தின் செயல்பாட்டின்போதே ஏற்படுத்தப்படும்.

xvii. ஒவ்வொரு கிணறும் (ஆழ்குழாய் / குழாய்க் கிணறு) அமைந்துள்ள இடத்தினை சுற்றிய நீர் செறிவூட்டும் மண்டலத்திற்குள் கட்டாயமாக ஒரு நீர் சேகரிப்பு கட்டமைப்பை உருவாக்க வேண்டும். வயல்களில் வரப்பு அமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், கற்களால் ஆன தடுப்பணைகள், நீர் செறிவூட்டும் குளம், பண்ணைக் குட்டை, அமிழ்வு குட்டை முதலிய அமைப்புகளை ஊரக வளர்ச்சித் துறை மூலம் முன்னுரிமை அடிப்படையில் நீர் செறிவூட்டும் கட்டுமான அமைப்புகளை அமைக்க தகுதியான இடத்தின் விபரங்களை, வேளாண்மை இணை இயக்குநருடன் ஒருங்கிணைந்து மாவட்ட ஆட்சியரிடம் பகிரப்பட வேண்டும்.

xviii. பாதுகாப்பான குறுவட்டங்களில் அமைக்க உள்ள அனைத்து கிணறுகளுக்கும் கிணறு அமைக்க ஆகும் மொத்த செலவில் ஒரு கிணறுக்கு ரூ.25,000/- தொகை வீதம் துணை நிலை நீர் மேலாண்மைத் திட்டம் வாயிலாகவும், மீதத் தொகை மாநில அரசு நிதி மூலம் செயல்படுத்தப்பட வேண்டும்.

xix. திறந்தவெளி கிணறுகள் அமைய உள்ள இடங்களில், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மூலம், ஊரக வளர்ச்சி துறையினரால் மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**நீர் இறைக்கும் அமைப்பு**

சமுதாய கிணறுகளிலிருந்து நீர் இறைப்பதற்கு சூரிய சக்தி அல்லது மின் சக்தி இணைப்பு வழங்கப்படும். நில நீர் ஆய்வின் அடிப்படையில் நிலத்தடி நீரின் மட்டம் 500 அடி ஆழம் வரை இருக்கும்பொழுது ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளுடன் அமைக்கப்படும். ஏனெனில், 10 எச்பி(HP) திறன் கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட் 500 அடி ஆழம் வரை மட்டுமே திறம்பட செயல்படும். 500 அடி ஆழத்திற்கு மேல் அமைக்கப்படும் ஆழ்துளைக் கிணறு /குழாய்க் கிணறுகளுக்கு, மின் இணைப்பு பம்புசெட் வழங்கப்படும்.

**அ) சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட் அமைப்பு**

i. குறைந்த மின்னழுத்த பேனல்களை கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் 500 அடி ஆழம் வரை உள்ள கிணறுகளுக்கு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் நிர்ணயித்துள்ள விலைகளின் அடிப்படையில் 7.5 எச்பி (HP) பம்பு செட்டுகளுக்கு பிரதம மந்திரி விவசாயிகள் ஆற்றல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு (PM-KUSUM) திட்டத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி பாதுகாப்பான குறுவட்டங்களில் உருவாக்கப்பட்ட கிணறுகளுக்கு மட்டுமே மொத்த செலவில் 30% ஒன்றிய அரசின் பங்கு வழங்கப்படுகிறது. 7.5 எச்பி (HP) பம்பு செட்டுகளுக்கு மேல் 10 எச்பி (HP) வரை அமைப்பதற்கு ஆகும் கூடுதல் செலவு மாநில அரசால் ஏற்கப்படும்.

ii. இத்திட்டத்தில் பாதுகாப்பான குறுவட்டங்கள் என மத்திய நிலத்தடி நீர் வாரியம், டைனமிக் நிலத்தடி நீர் ஆதார மதிப்பீடு,

2017 (மார்ச் 2017 நிலவரப்படி) குறிப்பிட்டுள்ள விவரங்கள் ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படும்.

iii. வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரி விவசாயிகள் ஆற்றல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு (PM-KUSUM) திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் உற்பத்தி நிறுவனங்களின் பம்புகளின் மாடல் மற்றும் வகை ஆகியவை இத்திட்ட செயல்பாட்டில் பயன்படுத்தப்படும்.

**ஆ) மின் சக்தியால் இயங்கும் பம்பு செட் அமைப்பு**

i. மின் சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள், எலக்ட்ரிக் பேனல், ஸ்டார்ட்டர் ஆகியவற்றிற்கு தேவையான பாதுகாப்பு கட்டமைப்பு வசதிகளுடன் அதிகபட்சமாக 10 HP கொண்ட மோட்டாருக்கான செலவினம் அரசால் ஏற்கப்படும்.

ii. சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் வழங்க சாத்தியக்கூறு இல்லாத இடங்களில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின்(TANGEDCO) மூலம் மின் இணைப்பு இத்திட்டம் மூலம் பெற்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

iii. மின்மோட்டார் பம்புசெட்டுகள் அமைக்க உள்ள அனைத்து இடங்களிலும், மின்மோட்டாருக்கு ஆகும் மொத்த செலவில் ஒரு மின்மோட்டாருக்கு தொகை ரூ.15,000/- வீதம், துணை நிலை நீர் மேலாண்மைத் திட்டம் வாயிலாகவும் மீதத் தொகை மாநில அரசு நிதியிலிருந்தும் வழங்கப்படும்.

**நீர் விநியோக குழாய்கள் :**

நீர் விநியோக குழாய்கள் நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து (ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு) ஒவ்வொரு விவசாயியின் வயலுக்கும் பாசன நீரை கொண்டு சேர்த்திட அமைக்கப்படுகிறது. இந்த பணிகளுக்கு "பிரதம மந்திரி நீர்ப்பாசனத் திட்டம் - ஒரு துளி நீரில் அதிக பயிர் - துணைநிலை நீர்மேலாண்மை செயல்பாடுகள்" என்ற திட்டத்தின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப வழங்கப்படும். விவசாயிகளின் பங்களிப்பு தொகையினை மாநில

அரசே ஏற்கும். தொகுப்பில் உள்ள விவசாயிகளின் நில உடமைக்கேற்ப கூடுதல் தொகை தேவைப்படின் அதற்கான தொகை சம்பந்தப்பட்ட விவசாயிகளால் செலுத்தப்பட வேண்டும்.

i. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நீர் விநியோக குழாய்கள் தயாரிக்கும் நிறுவனங்களின் குழாய்கள் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளின் நிலங்களில் நிறுவப்படும்.

ii. "பிரதம மந்திரி நீர்ப் பாசனத் திட்டம் - ஒரு துளி நீரில் அதிக பயிர் - நுண்ணீர்ப் பாசன திட்டத்தின்கீழ்" விவசாயிகளின் நிலங்களில் பயிர்களுக்கு ஏற்றவாறு உகந்த நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் வேளாண்மை அல்லது தோட்டக்கலைத் துறை மூலமாக மானியத்தில் அமைத்துத் தரப்படும்.

iii. குழுவில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பயிர்களின் தன்மை மற்றும் பயிர்களின் நீர் தேவைக்கு ஏற்றவாறு நீர்ப்பாசன பகிர்மான அட்டவணை வழங்கப்படும்.

2) ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் கிணறுகள் (ஆழ்துளைக் அல்லது குழாய்க் கிணறுகள்) அமைத்து மின்மோட்டருடன் நுண்ணீர்ப்பாசன வசதி அமைத்து தருதல்

i. இத்திட்டம் அரியலூர், செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தேனி, மற்றும் விருதுநகர் ஆகிய எட்டு மாவட்டங்களில் உள்ள 200 ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளின் நலனுக்காக, நிலத்தடி நீர் பாதுகாப்பான குறுவட்டங்களில் ஆழ்துளைக் அல்லது குழாய்க்கிணறுகள் அமைத்து மின்வசதியுடன், மின்மோட்டார் பொருத்தி, நுண்ணீர் பாசன வசதிகள் 100 சதவீத மானியத்தில் செயல்படுத்தப்படும்.

ii. மேலும் இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு உரிய வருவாய் துறையின் மூலம் வழங்கப்பட்ட சாதி சான்று பெறப்பட வேண்டும்.

iii. இத்திட்டம் "பிரதம மந்திரி நீர்ப் பாசனத் திட்டம் - ஒவ்வொரு வயலுக்கும் நீர் - நிலத்தடி நீர்ப் பாசனத் திட்டத்தின்" வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்படும்.

3) **மழைநீரை விளை நிலங்களிலேயே சேமிக்க பண்ணைக்குட்டைகள் அமைத்தல்**

i. பண்ணைக் குட்டைகள் அமைக்க விருப்பமுள்ள விவசாயிகள், தங்கள் சொந்த விளைநிலங்களில் மட்டுமே அமைத்தல் வேண்டும்.

ii. விவசாயிகளின் எழுத்துப்பூர்வமான ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

iii. மாவட்ட ஆட்சியரின் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் துண்டுப் பிரசுரங்களை (Pamphlet) விநியோகித்து மாவட்ட அளவில் மாவட்ட நிர்வாகம் மூலம் இத்திட்டத்திற்கு விளம்பரம் செய்து, ஆர்வமுள்ள விவசாயிகள் கண்டறியப்பட வேண்டும்.

iv. மானாவாரி விவசாயிகள், ஆதிதிராவிட / பழங்குடியின (சிறப்பு கூறுகள் திட்டம்) சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

v. நிலத்தின் சரிவு (Slope) மற்றும் மண்ணின் ஊடுருவக்கூடிய தன்மையின் (Soil permeability) அடிப்படையில் பண்ணைக் குட்டை அமைக்கப்படும் இடம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பண்ணைக் குட்டைகள் மண்ணின் ஈரப்பதத்தை ஒட்டுமொத்தமாக மேம்படுத்துவதன் மூலம் உற்பத்திப் பரப்பை அதிகரிக்கச் செய்யும்.

vi. நிலத்தின் சரிவு (Slope) மற்றும் மண்ணில் ஊடுருவக்கூடிய தன்மை (Soil permeability) மற்றும் ஏற்கனவே உள்ள நீர் சேகரிப்பு கட்டமைப்புகளின் இருப்பிடம் மற்றும் புதிய நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கும் நோக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட வேண்டும்.

vii. பண்ணைக் குட்டைகளின் அமைவிடம் ஒவ்வொரு பகுதியிலும் உப்பு மற்றும் கார நீர் அச்சுறுத்தலின் தாக்கங்களை நடுநிலையாக்க பயன்பட வேண்டும். அனைத்து கிராமங்களிலும், ஒவ்வொரு பகுதியிலும் முக்கியமாக மானாவாரி பகுதிகளில் பண்ணைக் குட்டைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

viii. அதிகப்படியான நீரினை சேகரிக்கவும் போதுமான நீர்பிடிப்புப்பகுதி கொண்ட விவசாயியின் நிலங்களின் தாழ்வான பகுதிகளில் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட வேண்டும்.

ix. நிலங்களின் தன்மை மற்றும் விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்ப பண்ணைக் குட்டைகளின் அளவு மற்றும் ஆழம் மாறுபடும். நிலப்பரப்பின் கீழ் பாறைகள் அல்லது வளம் குன்றிய மண் இருந்தால் பண்ணைக் குட்டையின் ஆழம் குறைந்த பட்சம் 1.5 மீட்டர் முதல் 3 மீட்டர் வரை மாறுபடும். ஆழமான கட்டைகள் குறைந்த பரப்பளவுடன் இருப்பதால் குறைந்த நீராவியாதல் நடை பெற்று அதிகளவு நீரை சேமிக்கும்.

x. பண்ணைக் குட்டைகளில் நிலையான நுழைவு மற்றும் நீர்வெளி செல்லும் வழி அமைக்க வேண்டும். RCC குழாய்கள் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் அவற்றின் விட்டம் 30 சென்டி மீட்டருக்கும் குறைவாக இருக்கக் கூடாது. கல் அடைப்புடன் கூடிய நுழைவு அமைக்க வேண்டும். ஆர்சிசி பைப்புக்குப் (RCC Pipe) பதிலாக பிவிசி பைப் (PVC pipe) பயன்படுத்தக் கூடாது.

xi. நுழைவு வழியில் தலைச்சுவர்கள் (Head wall) கட்டப்பட வேண்டும் மற்றும் குளத்தின் உள்ளே குழாய் நீட்டப்பட வேண்டும்.

xii. குளத்தைச் சுற்றி வரப்புகள் 0.60 மீட்டர் முதல் 1.00 மீட்ட உயரம் மற்றும் மேல் அகலம் 0.60 மீட்டர் மற்றும் பக்க சரிவுகள் 1.1 மண்ணின் வகையைப் பொறுத்து, தோண்டப்பட்ட மண்ணைப் பயன்படுத்தி உருவாக்கப்பட வேண்டும்.

xiii. சுற்றிலும் ஒரே மாதிரியான 1.00 மீட்டர் அகலம் (Berm width) கொண்ட வரப்புகளை பலப்படுத்தி மட்டம் அடித்து அமைக்க வேண்டும்.

xiv. பண்ணைக் குட்டைகள் மணல் மற்றும் எளிதில் நீர் உறிஞ்சும் தன்மை கொண்ட நிலங்களில் உருவாக்கக்கூடாது. ஏனெனில் இந்த குளத்தில் சேமிக்கப்படும் நீர் எளிதில் ஊடுருவி, பயிர்கள் வாடுவதைத் தடுக்க உதவிடும் உயிர் பாசனம் கொடுக்க தண்ணீர் கிடைக்காது.

xv. குட்டையின் பக்கவாட்டு பகுதிகள் உறுதிக்காக சாய்வாக இருக்க வேண்டும்.

xvi. கொடுக்கப்பட்ட விவரக்குறிப்புகளுடன் வரப்புகள் அமைக்கப்பட்டு, அதிகப்படியான மண்ணை பாதுகாப்புக அகற்ற வேண்டும்.

xvii. இயந்திரங்களைப் பயன்படுத்தி பண்ணைக் குட்டை அமைக்கும்போது, முதல் 100 மீட்டர் வரை மண்ணை கொண்டு செல்ல பொதுப் பணித்துறையின் விலை விகித விவர அட்டவணையின்படி அனுமதிக்கப்படுகிறது. தோண்டப்பட்ட மண்ணை விவசாயிகள் தங்கள் சொந்த நிலங்களில், அதை ஒட்டிய வயல்களில் பொதுவாகப் பயன்படுத்துகிறார்கள். தேவையெனில் மதிப்பீட்டில் மேலும் 100 மீட்டருக்கு மண்ணை கொண்டு செல்ல வழிவகை செய்யலாம். விவசாயிகள் மிக அதிக தூரம் உள்ள இடங்களுக்கு கொண்டு செல்ல விரும்பினால் அதற்கான செலவை சம்பந்தப்பட்ட விவசாயிகளே ஏற்க வேண்டும்.

xviii. பண்ணைக் குட்டைகள் பொதுப்பணித் துறையின் தற்போதைய வருடத்திற்கான விலை விகித அட்டவணையின்படி உருவாக்கப்பட வேண்டும்.

xix. விவசாயிகள் வரப்புகளில் காய்கறி செடிகள் போன்றவற்றை வளர்த்து, வரப்புகளை உறுதிபடுத்திக்கொள்ளலாம்.

xx. திட்டப் பணியின் மதிப்பின் அடிப்படையில் பணியை நிறைவேற்றுவதற்கு டெண்டர் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

xxi. அளவைப் புத்தகத்தில் (M.Book) சரியாகப் பதிவு செய்யப்பட்டு அதற்கேற்ப பணம் வழங்கப்பட வேண்டும்.

xxii. பணித்தளத்தில் உள்ளபடி அளவைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும் மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல் செலவு செய்தல் வேண்டும்.

xxiii. அளவீடு-

அ. உதவிப் பொறியாளர் (வே.பொ)/ இளநிலைப் பொறியாளர் (வே.பொ)- 100% முழுமையான அளவீடு செய்தல் வேண்டும்.

ஆ. உதவி செயற் பொறியாளர் (வே.பொ) -75% சரிபார்ப்பு அளவீடு செய்தல் வேண்டும்.

இ. செயற் பொறியாளர் (வே.பொ) - 20% மறு சோதனை அளவீடு செய்தல் வேண்டும்.

ஈ. கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ) -5% சோதனை சரிபார்ப்பு அளவீடு செய்தல் வேண்டும்.

xxiv. மாவட்ட செயற் பொறியாளர்கள் (வே.பொ) திட்டப்பணிகளை அடிக்கடி ஆய்வு செய்து பணியின் தரத்தை உறுதி செய்ய வேண்டும்.

xxv. கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ) ஒவ்வொரு உபகோட்டத்தில் செயல்படுத்தப்பட்ட வேலைகளை ஆய்வு செய்ய வேண்டும்.

xxvi. உதவி செயற் பொறியாளர்கள் (வே.பொ) பிரேரிக்கப்பட்ட திட்டப்பணிகள் புதியது என்றும், நமது துறை அல்லது பிற துறைகளில் உள்ள எந்த திட்டத்திலும், செயல்படுத்தப்படவில்லை என மதிப்பீட்டில் ஒரு சான்றிதழை வழங்க வேண்டும்.

xxvii. மேற்கொள்ளப்பட்ட பண்ணைக் குட்டைகளின் விவரங்களினை, மாவட்ட ஊரக வளர்ச்சி முமையிடம் தெரிவித்திடல் வேண்டும்.

4) **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசன குளங்கள், ஊரணிகள், குளங்கள் மற்றும் வரத்து கால்வாய்களை தூர்வாரி மேம்படுத்துதல் (100 சதவீத மானியம்).**

i. இத்திட்டம் சென்னை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

ii. மேற்கண்ட பணிகளை தேர்வு செய்யும்போது, கடந்த 3 ஆண்டுகளில் இதர துறைகளினால் தூர்வாரப்படாமல் உள்ள கிராம திட்ட செயலாக்கக்குழு கண்டறிந்த பணிகளில், தேவையின் அடிப்படையில் மாவட்ட கண்காணிப்பு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து மேற்கொள்ளப்படும்.

iii. பணிகள் ஆரம்பிக்கும் முன்பு கரைகளின் முன் அளவீடுகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

iv. தூர்வாரும் மண்ணைக்கொண்டு கரைகள் பலப்படுத்தப்படும்போது கரைகளின் மேல் மட்டம் மற்றும் பக்கவாட்டு சரிவுகள் முறையாக அமைக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

v. ஊரணிகள், குளங்களை தூர்வாரும் போது கரைகளை பலப்படுத்துதலுக்கு தேவைப்படும் மண் போக மீதமிருக்கும் மண்ணினை வருவாய் துறையின் அனுமதி அனுமதியினை பெற்று அருகாமையில் உள்ள இடங்களில் உரிய முறையில் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

vi. தூர்வாரும் பணிகளில் இயந்திரம் பயன்படுத்தப்பட்ட மணிநேரம் இயந்திர வாரியாக அளவீடு புத்தகத்தில் (M- Book) பதிவு செய்யப்பட வேண்டும்

vii. இப்பணிகள் மேற்கொள்ளும் முன்பும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும், முடிவுற்ற பின்பும் தேவையான புகைப்படங்கள் முழுமையாக எடுத்து ஆவணப்படுத்தல் வேண்டும்.

## 5) ஆவணப்படுத்தல் மற்றும் நிர்வாகச் செலவினம்

திட்ட செயலாக்கத்திற்கு ஏற்படும் நிர்வாக செலவினங்களுக்கும் ஆவணப்படுத்துதலுக்கும், அவ்வப்போது ஏற்படும் சில்லரைச்செலவினங்களுக்காகவும் இவ்வினத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதி செலவிடப்படும்.

**பொது வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. கிராம திட்ட செயலாக்கக்குழு கண்டறிந்த தரிசு நில தொகுப்பு விவசாயிகளுடன் ஆலோசனை செய்தல்.

ii. தரிசு தொகுப்பு நிலங்களில் நீர்வள ஆதாரம் கண்டறிந்து, திட்ட மதிப்பீடு தயாரித்தல்.

iii. தொகுப்பு தரிசு நிலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நீர்வள ஆதாரம் இருப்பின் ஆழ்துளைக் கிணறு/குழாய்க் கிணறு அமைத்து சூரிய சக்தி / மின்சார வசதி ஏற்படுத்தி பம்பு செட்டுக்களுடன் தேவையான கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்.

iv. நிலத்தடி நீர் இல்லாத நிகழ்வுகளில் நீர் சேமிப்பு கட்டமைப்புகளான பண்ணை குட்டைகள் அமைத்தல்.

v. பாசன நீர் ஆதாரங்களை உருவாக்கும் பணிகள் மற்றும் பண்ணைக்குட்டைகள் அமைத்தல் ஆகிய திட்டப்பணிகளுக்கான மதிப்பீடுகள் கள ஆய்வின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு, தொழில் நுட்ப ரீதியில் உபகோட்ட அளவில் சரிபார்க்கப்பட்டு, உதவி செயற் பொறியாளர் / செயற்பொறியாளர் / கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ)களால் உரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

vi. மேற்படி பணிகள் உரிய அலுவலர்களால் ஒப்பந்தப்புள்ளி (Tamil Nadu Transparency In Tenders Act, 1998) அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

vii. அனைத்து பணிகளும் நடைபெறும் பொழுது பல்வேறு நிலைகளில் உதவி செயற் பொறியாளர் / செயற்பொறியாளர் / கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ) ஆகியோர்களால் அவற்றின் தரம் மற்றும் முன்னேற்றம் குறித்து கண்காணிக்கப்பட வேண்டும்.

viii. பணிகளின் அனைத்து நிலைகளிலும் புகைப்படம் மற்றும் வீடியோ ஆவணப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ix. வேளாண்மைப் பொறியியல் துறைக்கும் உழவர் ஆர்வலர் குழு சங்க விவசாயிகளுக்கும் இடையிலேயான கூட்டு ஒப்பந்தம், சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் பராமரிக்கப்பட வேண்டும்.

x. ஒவ்வொரு தொகுப்பிலும் மேற்கொள்ளப்படும் பணி குறித்த விவரங்கள் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் தனியாக ஒரு பதிவேட்டில் பராமரிக்கப்பட வேண்டும்.

xi. தொகுப்பில் உள்ள விவசாயிகளின் நிலப்பரப்பிற்கு ஏற்றவாறு நீர்பங்கீடு செய்வதற்கு ஏதுவாக உழவர் ஆர்வலர் குழுவிற்கு சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வே.பொ)களால் உரிய அறிவுரைகள் வழுங்கப்பட வேண்டும்.

xii. திட்ட செயலாக்கத்தின் போது திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது பின்பற்ற வேண்டும்.

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர் 9/8/22
9/8/22

அரசாணை (நிலை) எண். 59, வேளாண்மை-உழவர் நலத்(வஇபதி) துறை, நாள் 09.03.2022.

## இணைப்பு - III

## வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் மூலம் ஒன்றிய, மாநில நிதி பங்களிப்புடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் பிற திட்டங்கள்(Dovetailed Scheme)

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்ட இனங்கள் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டக் கிராமங்களில் முன்னுரிமை அளித்து செயல்படுத்தப்படும். துறை வாரியான திட்ட விபரங்கள் பின்வருமாறு:-

**அ. வேளாண்மைத்துறை**

| வ. எண் | திட்டங்கள் | திட்ட நிதி ஆதாரம் |
|---|---|---|
| 1 | தரிசு நில மேம்பாடு | தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP) |
| 2 | ஒருங்கிணைந்த பண்ணையம் | தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம் (NADP) & மானாவாரிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (RADP) |
| 3 | துவரை சாகுபடி திட்டம் | தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் |
| 4 | திரவ உயிர்உரம் பயன் படுத்துதல் | தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் |
| 5 | வேளாண் காடுகள் உருவாக்குதல் | தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான |

| வ. எண் | திட்டங்கள் | திட்ட நிதி ஆதாரம் |
|---|---|---|
| 8 | நெல் உற்பத்தி பெருக்கத்திட்டம் | தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் |
| 9 | பயறுவகைப் பயிர்கள் உற்பத்தி பெருக்கத்திட்டம் | தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் |
| 10 | மக்காச்சோளம் உற்பத்தி பெருக்கத் திட்டம் | தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் |
| 11 | சிறுதானியம் உற்பத்தி பெருக்கத்திட்டம் | செயல் விளக்கம் &விதை விநியோகம் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் |
| 12 | எண்ணெய்வித்துக்கள் உற்பத்தி பெருக்கத்திட்டம் | செயல் விளக்கம்&விதை விநியோகம் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் |
| 13 | அட்மா திட்ட செயல்பாடுகள் | மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத்திட்டம் |
| 14 | தென்னை சாகுபடியை மேம்படுத்துதல் | தென்னை வளர்ச்சி வாரியத் திட்டம் |
| 15 | விவசாய குழுக்கள் ஏற்படுத்துதல் | மாநில அரசு திட்டம் (கூட்டுப் பண்ணையத்திட்டம்) |
| 16 | மானாவாரி சாகுபடியை மேம்படுத்துதல் | ஒன்றிய & மாநில அரசு திட்டம் |
| 17 | உயர்தொழில்நுட்ப செயல்விளக்கங்கள் | உலக வங்கி & மாநில அரசு நிதி (நீர்வள நிலவளத் திட்டம்) |
| 18 | மக்காச்சோளப்பயிரில் படைப்புழு மேலாண்மை | தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம் |
| 19 | தென்னை ரூகோஸ் வெள்ளை ஈ மேலாண்மை | மாநில அரசு திட்டம் |
| 20 | வேளாண்மை உபகரணங்கள் வழங்குதல் | மாநில அரசு திட்டம் |
| 21 | தென்னங்கன்று வழங்குதல் | மாநில அரசு திட்டம் |

| வ. எண் | திட்டங்கள் | திட்ட நிதி ஆதாரம் |
|---|---|---|
| 24 | ஜிங்சல்பேட் மற்றும் ஜிப்சம் வழங்குதல் | மாநில அரசு திட்டம் |
